விலே சதம் 60 ★ பக்கங்கள் 10

பாவியுங்கள்
நாள் எல்லாம்
நறுமணம் கமழும்
அண்ணா பத்தி
ஜெயந்தி பத்தி
கஜானு பத்தி

SRI LANKA ... CAMPUS
RECEIVED
1980 - 3 - 10
PERIODICALS DIVISION
LIBRARY


# ஈழநாடு வார மலர்

THE EELANADU VARAMALAR


"அசலும் நகலும்"
உங்கள் அபிமானத்துக்குரிய
"மில்க்வைற்
நீல சோப்பை"
போன்ற அமைப்புள்ள வேறு
தயாரிப்புக்கள் உலாவுவதால்
மேலுறைகளில்
V. M. K. அடையாளத்தை
கவனித்து வாங்குங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்

மலர் 22 | மாசி 26 | ரபி ஆகிர் 21 | ஞாயிற்றுக்கிழமை | (9—3—80) | இதழ் 28

"தேசிய ஒற்றுமையே ஜனதிபதியின் இலட்சியம்

# இன ஐக்கியத்தை ஏற்படுத்த மாணவர் மத்திய நிலையம்

## நாடுபூராவும் இவ்வருட இறுதிக்குள் நிறுவப்படும்"

### யாழ். நகரில் நீதி அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

ஜனதிபதியின் உயர்ந்த இலட்சியம் தேசிய ஒற்றுமையேயாகும். தேசிய ஒற்றுமையையும் இன ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் நோக்குடன் தொகுதிகள் தோறும் மாணவர் மத்திய நிலையங்களை நிறுவ கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் மிக விரைவில் இந்த நிலையம் அமைக்கப்படும்,

இவ்வாறு நீதி அமைச்சர் டாக்டர் நிசங்கா விஜயரத்தின யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் பேசுகையில் கூறினர்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கேகாலை மாணவர், ஆசிரியர், பெற்றேருக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையிலேயே நிசங்கா மேற்கண்டவாறு கூறினர்.

யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பிரதிக் கல்வி அமைச்சர் திரு. சமரவீர வீரவன்னி, பிரதி கல்வி மாஅதிபர் திரு. ஜோஜ் மெண்டிஸ் யாழ். மாவட்ட செயலாளர் திரு. யோகேந்திரா துரைசாமி, வடமாநில கல்வி அதிபர் திரு. ரி. மாணிக்கவாசகர், கேகாலை மாவட்ட கல்வி அதிபர் திரு. ஜெயதிலகா கேகாலை மாவட்ட அமைச்சர் திரு. என். ஏ. செனவிரத்தின, வடமாநில டி. ஐ. ஜி. திரு. பி. மகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நீதி அமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்தின மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்களுக்கும் மற்றும் இலங்கையிலுள்ள எல்லா

(10ம் பக்கம் பார்க்க)

## மனைவியையும் குழந்தையையும் விற்றார்

புதுடில்லி, மார்ச். 8

இந்தியாவின் மத்தியபிரதேசத்தில் வறுமைப்பிணியால் தாக்குண்ட கிராமவாசியொருவர் தமது 22 வயதான மனைவியையும், 2 வயதுக் குழந்தையையும் முதியவரொருவருக்கு 6,000ரூபா(620டொலர்) வுக்கு விற்ருர்.

பின்னர் அப்பெண்ணின் சகோதரனின் பொலிஸ் முறைப்பாடடைத் தொடர்ந்து பெண்ணும் குழந்தையும் மீட்கப்பட்டு சகோதரனிடமே ஒப்படைக்கப் பட்டுள்ளனர். இத் தகவல்களைப் பொலிஸ் தெரிவித்துள்ளது. (நா)

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபையின் 768-வது சுவீப் சீட்டிழுப்பு அண்மையில் நடைபெற்றது. பரிசு பெற்ற டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

முதலாவது பரிசு

**20 J 0150**

ரூபா 100,000

இரண்டாவது பரிசு

**29 T 0594**

ரூபா 40,000

மூன்ருவது பரிசு

**30 A 0132**

ரூபா 10,000

தலா ரூ. 1,600·50 சதம் ஆறுதல் பரிசு பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 04 A 0766 | 06 A 0322 |
| 08 A 0914 | 10 A 0798 |
| 20 A 0098 | |
| 07 B 0867 | 09 B 0448 |
| 19 B 0674 | 20 B 0823 |
| 22 B 0884 | 30 B 0024 |
| 31 B 0370 | |
| 07 C 0192 | 23 C 0658 |
| 33 C 0696 | |
| 14 D 0516 | 17 D 0662 |
| 17 D 0978 | 21 D 0196 |
| 04 E 0606 | 16 E 0068 |
| 17 E 0941 | 18 E 0110 |
| 02 F 0686 | 16 F 0201 |
| 31 F 0671 | 01 G 0753 |
| 11 G 0836 | 14 G 0967 |
| 15 G 0951 | 16 G 0193 |
| 19 G 0482 | 19 G 0826 |
| 05 H 0603 | 16 H 0736 |
| 26 H 0426 | 31 H 0179 |
| 32 H 0737 | 33 H 0352 |
| 19 J 0232 | 22 J 0321 |
| 24 J 0475 | 13 K 0899 |

(10-ம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தூதுவர் கச்சதீவு சென்று திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

இந்தியத் தூதுவர் திரு. தோமஸ் ஏபிரஹாம், திருமதி ஏபிரஹாம், வெளிநாட்டு அமைச்சின் செயலார் திரு. டபிள்யூ. ரி. ஜெயசிங்கா, திருமதி ஜெயசிங்கா ஆகியோர் நேற்றுக் காலை ஊர்காவற்றுறையிலிருந்து கச்சதீவு சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து விசேட விமான மூலம் பலாலிக்கு வந்த இவர்களை யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். தர்மபாலன் யாழ்ப்பாணத்திலிருந்து கந்தரோடை தொல்பொருள் அகழ்வு ஆராய்ச்சி நிலையத்திற்கு அழைத்துச் சென்ருர்.

நேற்றுக்காலை இவர்களுடன் குடிவரவு குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் திரு. ரெரன்ஸ் பெர்னன்டோ, மேலதிக அரசாங்க அதிபர் என். பி. ஜெகநாதன், சுங்க உதவிக் கலக்டர் சேனரத்ன, கடற்படைத் தளபதி விக்கிரமரத்தின, வடபிராந்திய போக்குவரத்துச் சபைத்தலை திரு. டட்லி குணசேகரா ஆகியோரும் கச்சதீவுக்குச் சென்றனர்.

நேற்று மாலை மீண்டும் இவர்கள் விமான மூலம் கொழும்பு சென்றனர்.

(கொ-இ)

## கேகாலை மாணவர் குழுவுக்கு ரயில் நிலையத்தில் வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுமுன்தினம்இரவு யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த மாணவர்கள், ஆசிரியர்கள், கேகாலை மாவட்ட கல்வித் திணைக்கள அதிகாரிகளை பிரதி கல்வி மாஅதிபதி திரு. ஜோஜ் மெண்டிஸ், வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர், வடமாநில சிங்கள பிரதம கல்வி அதிகாரி திரு. சேனரத்ன, வடமாநில கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றேர், மதகுருமார் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர்கள் ஆகியோர் திரளாகக் கூடிநின்று வரவேற்றனர்.

கேகாலை மாவட்ட பிரதம கல்வி அதிகாரி திரு. நெல்சன் எதிரிசூரியா தலைமையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த இக்கோஷ்டியினர் யாழ். இந்துக்கல்லூரி மத்திய கல்லூரி, கனகரத்தினம் மகா வித்தியாலயம், சென் பற்றிக்ஸ் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். மேரீஸ் கல்லூரி, ஒஸ்மானியாக் கல்லூரி, சிங்கள மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இம்மாணவர்களும் ஆசிரியர்களும் தங்கியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை விசேட ரயில் மூலம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்த

(10-ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் ராஜன் அண்ணு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ரியூட்டரி மாணவி கமலம் மரணம் தொடர்பாகப் பருத்தித்துறை பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்ட கமலத்தின் ஒன்றுவிட்ட சகோதரன் கே. ராஜ்குமார் என்றழைக்கப்படும் ராஜன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த ராஜனை சிறைச்சாலை அதிகாரிகள் நேற்று முன்தினம் மாலை யாழ் ஆஸ்பத்திரி 17 ம் வார்ட்டில் அனுமதித்தனர்.

யாழ். ஆஸ்பத்திரியில் ராஜனுக்குப் பலத்த பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது. பொலிசாரும் சிறைச்சாலை அதிகாரிகளும் இணைந்து பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

ராஜனைப் பார்ப்பதற்காகப் பெருந்திரளான மக்கள் ஆஸ்பத்திரிக்குச் செல்கின்றனர்.

(கொ-இ)

## யாழ் மாவட்ட அமைச்சர் இன்று கச்சதீவு செல்கிருர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன், யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி ஆகியோர் இன்று காலை கச்சதீவு செல்லவுள்ளனர்.

இன்றுமாலை திரு. துரைசுவாமி கச்சதீவில் இருந்து நெடுந்தீவுக்குச் சென்று அங்கு புதிதாக அமைக்கப்பட்ட தபாலகத்தைத் திறந்து வைப்பார். (கொ)

யாழ். நகர மக்களே!
அதிசிறந்த 'போட்டோ ஸ்ரட்'
பிரதி -/75 சதம் மட்டுமே.
நாடுங்கள்:
122, கே.கே.எஸ். வீதி-யாழ்ப்பாணம்.
மகாராஜா முதலீட்டு
நிதி நிறுவனம்
தொலைபேசி: 8267

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

மர கடைச்சல்வேலை, (Toys) தச்சுவேலை, ஓவியம் வரைபவர், (பெண்கள்) ஆகிய வேலைகளுக்கு அனுபவ மிக்க வேலை ஆட்கள் தேவை. நேரில் வாவும். நாதன் இசைக்களஞ்சியம், 40, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 8040. (5174

யாழ் மேக்கன்னைல் பாதுகாப்புச் சேவைக்குப் பாதுகாவலர்கள் தேவை. காலம் 11-3-80 12-3-80 ம் காலை 9 மணியிலிருந்து 11 மணி வரையில் நேர்முகப் பரீட்சை நடைபெறும் அத்தாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும் முகவரி: கோம்' சுவீற் கோம், கொக்குவில் கிழக்கு, (நந்தாவில் அம்மன்கோவில் முன்பாக) 5159

மறைன் டீசல் என்ஜின் வேலை பழகுனர்கள் தேவை. வயது 16-க்கும் 20 க்கும் இடைப்பட்டவர்களாகவும் குறைந்தது எட்டாம் வகுப்பு வரை படித்தவர்களாகவும் இருக்கவேண்டும். அரசாங்க விகிதப்படி சம்பளம் வழங்கப்படும். விண்ணப் பிக்கவும்: விளம்பர இல. 5173 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5173

எலுமிச்சம் கோது நன்கு காய்ந்தது தேவை. மில்க்வைற் யாழ்ப்பாணம். 5178

பெரு-நெல்லிக் கன்றுகள் நவராத்திரிக்கு மரநாட்டு விழாவிற்கு நடுவதற்கு நெல்லிக்கன்றுகள் (பெருநெல்லி) பெருந்தொகையாகத் தேவை. மில்க்வைற்-யாழ்ப்பாணம். 5177

பழைய, பெரியவீட்டுடன் விசாலமான காணி வாடகைக்கு, குத்தகைக்கு அல்லது விலைக்கு தேவை. தனியார் மியூஸியம், கலை மண்டபம், வேலைத்தலம் அமைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். விபரங்களுடன் எழுதவும். எக்கவுன்டிங் சிஸ்ரம்ஸ் அன் சேர்விஸஸ் லிமிட்டெட், 115, மெயின் வீதி, யாழ்ப்பாணம், அல்லது 49. அப்துல் கபூர்மாவத்தை கொழும்பு-3 5182

கிளிநொச்சிக்கும் வவுனியாவுக்கும் இடையில் கண்டி வீதியை முகப்பாகக் கொண்ட நான்கு ஏக்கர் காணி விலைக்குத் தேவை. விபரங்களுடன் எழுதவும். எக்கவுன்டிங் சிஸ்ரம்ஸ் அன் சேர்விஸஸ் லிமிட், 145, பிரதான வீதி, யாழ்ப்பாணம் அல்லது 49 அப்துல் கபூர் மாவத்தை, கொழும்பு-3. 5181

யாழ். நகரின் பத்துமைல் சுற்றுடலுக்குள் 2—3 பரப்புக் காணியுடன் வீடு தேவை. விலை விபரத்தைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். விளம்ப இல: 5175, C/o ஈழநாடு லிமிடெட், த. பெ. எண். 49, யாழ்ப்பாணம். 5175

பலசரக்கு வியாபாரத்தில் அனுபவம் உள்ள சேல்ஸ்மன் தேவை. தொடர்புகொள்ளவும். 18, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். 5179

மறைன் டீசல் என்ஜின் மெக்கானிக்மார் குறைந்தது. தனியாக என்ஜின் கழட்டி பூட்டும் ஆற்றல் உள்ளவர்களாகவும் 18-க்கும் 30-க்கும் இடைப்பட்ட வயதினராகவும் இருக்கவேண்டும். திறமைக்கு முதலிடமும் அரசாங்க விகிதப்படி சம்பளமும் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5172, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5172

## தேவை

யாழ்ப்பாணத்தில் ஓர் பிரபல ஸ்தாபனத்திற்கு, வான் மூலம் பொருட்கள் விற்பனை செய்யக் கூடிய ஆற்றல் வாய்ந்த விற்பனையாளர் தேவை. விற்பனை சம்பந்தமான அறிவாற்றல், மூன்று வருட அனுபவத்துடன் கூடியவர்கள் சான்றிதழ்களுடன் 15-3-80-க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5160 C/o. ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 5160

றபர்சீல் செய்வதற்கு ஆண் உதவியாளர் தேவை மேவின்ஸ், 91/1, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம், 5129

## விற்பனைக்கு

6 ஸ்ரீ 3981 லம்பிறட்டா ஸ்கூட்டர் (இந்தியன் மொடல்) விலை சுமார் ரூபா 7000/- A. B. அஸ்பறி, 'தவ இல்லம்' அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. 5163

10 ஸ்ரீ தொடர்பிலக்க 150 CC வெஸ்பா ஸ்கூட்டர் (Vespa) உடனடியாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: B. சபாநாதன், 14, மணல் தறை ஒழுங்கை, கந்தர்மடம். 5151

34. ஸ்ரீ 2000 தொடர் இலக்க டொயோட்டா ஹையேஸ் (Toyota Hiace) வேன் காட்சி அறை நிலையில் விற்பனைக்குண்டு. 88/1, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 5184

## வகுப்புகள்

G. C. E. சாதாரண வகுப்பு ஆங்கில இலக்கண இலக்கியம் (English Literature) ஆங்கிலப் பேச்சு (Spoken English) தனிப்பட்ட முறையாய், வீடுகள் சென்றும், கற்றுக் கொடுக்கப்படும். தொடர்பு: விளம்பர இல:5164, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 5164

CLASSES

P.M.G's certificate (special) Radio officers exam. Sept/Oct. 80. Classes start on 22-3-80 above examination. Rajaratnam, Bond Institute, Hospital Road, Jaffna. 5153

சுன்னாகம் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுள்ளது) சுன்னாகம்.

## அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் 5000க்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகளும், கழிவு மாவும், லொறி ரயர்களும், வெற்றுப்பரல்களும் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன. வெற்றுச் சாக்குகளுக்கு மீளளிப்பு வைப்புப்பணமாக ரூபா 250/-உம் ஏனையவற்றிற்கு ரூபா 50/-உம் செலுத்திக் கேள்விப்பத்திரங்களைக் காரியாலய வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் 14-3-80 வெள்ளிக்கிழமை மத்தியான 12-00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்.
7-3-80 5185

# தவக்கால நற்சிந்தனை



மனந்திரும்புங்கள்...
(லூக். 13: 1-9)

மனந்திரும்பாதவன் கனி கொடாத அத்தி மரத்துக்கு ஒப்பாவான். பலன் தராத மரத்தின்மீது வெறுப்புக் கொண்ட தலைவனின் கோபத்தை தோட்டக்காரன் தணித்து இன்னும் சிறிது காலம் கொடுத்து பொறுத்திருக்கும்படி மன்றாடியது போல, நம்முடைய வாழ்க்கையிலும் எத்தனையோ தடவைகளில் நமக்காக இயேசு கடவுளிடம் பரிந்துபேசி தண்டனையைத் தடுத்து, நமக்கு காலம் தருகிறார் மனந்திரும்ப.

இறைவன் பொறுமையுள்ளவர், சினம்கொள்ளத் தாமதிப்பவர் (சங். 102,8) நாம் மனம் திரும்பும்வரை காத்திருப்பவர். "ஆண்டவர் உங்கள் பொருட்டு பொறுமையாயிருக்கிறார். அனைவரும் அழிவுறக் கூடாது எல்லாரும் மனந் திரும்ப வேண்டுமென்றிருக்கிறார்" (2 இரா. 3.9)

இறைவனின் அளவுகடந்த பேரிரக்கத்தை நினைந்து மனமுருகுவோம். மனந்திரும்புவோம். சிறப்பாக இத் தவக்காலத்தை மனந்திரும்பும் காலமாக கொள்வோம். நம்முடைய பழைய துர்க்குணங்களைக் களைந்து விடுவோம். நன்மையான காரியங்களையே நாடுவோம். முற்றிலும் மாறிய மனிதர்களாக இத் தவக்காலத்திலிருந்து வெளியேற முயலுவோம்......

- வண. மேரி பஸ்ரியன் அடிகள்.

# ஜெகநாதனின் சிறுகதைக்கு 'தகவம்' பரிசு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு இரண்டாம் காலாண்டு வெளிவந்த சிறுகதைகளில் அதிசிறந்த கதைக்கான தகவத்தின் பரிசு காவலூர் எஸ். ஜெகநாதனின் 'சீதேவிகள்' சிறுகதைக்குக் கிடைத்துள்ளது.

இரசிகமணி கனக. செந்திநாதன் நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதற்பரிசுபெற்று 'சுடரில்' வெளிவந்த அக்கதைக்கே தமிழ்க் கதைநர் வட்டம் பரிசளித்துள்ளது. ஜெகநாதனின் 'ஓர் உள்ளம் ஊமையாகிறது' என்ற சிறுகதை முதற்காலாண்டுத் தெரிவிலும் தகவத்தின் பாராட்டுப் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கது (அ)

Brownson
வாங்குங்கள்
பிரவுண்சன் அரறூட்-மா
பிரவுண்சன் அரறூட் மா அரச உணவு மருந்துச் சட்டத்தின் கீழ் உத்தரவாதப் படுத்தப்பட்டது.

# 'அளவையியல் வினாவிடைக் களஞ்சியம்'

ஆசிரியர்: சுண்டிக்குளி எஸ். எஸ். மனோகரன்

அண்மைக்கால நூல் வரலாற்றில் சுண்டிக்குளி எஸ். எஸ். மனோகரன் எழுதிய அளவையியல் நூல்கள் யாவராலும் அபாரமான முறையில் முதன்முறையாக இலகுவான மொழி நடையில் புதிய பாடத்திட்ட ஒழுங்குமுறைகளுக்கேற்ப அடுத்தடுத்து அளவையியல் நூல்களை வெளியிட்டுவரும் பெருமை மனோகரனுக்கே உரியது. சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் அளவையியல் துறையில் கொண்ட ஆர்வத்தினாலும் ஈடுபாட்டினாலும் பாதுகாப்பு அமைச்சில் கிடைத்த பதவியை இராஜினாமாச் செய்தார். 1978ம் ஆண்டில் 'அளவையியற் சுருக்கம் பகுதி I' எனும் நூலை

(10-ம் பக்கம் பார்க்க)

✶ சோவியத் மக்களின் வாழ்வு, கலாசார, விஞ்ஞான முன்னேற்றம் பற்றிய சுவையான செய்திகளையும் வளர்ச்சியுற்ற சோஷலிஸத்தின் வியத்தகு சாதனைகள் பற்றிய தகவல்களையும்;

✶ விஞ்ஞான சோஷலிஸம், சோஷலிஸ நிர்மாண அனுபவம், தொழிலாளி வர்க்க-தேசிய விடுதலை இயக்கப் பிரச்னைகள் பற்றிய தத்துவக் கட்டுரைகளையும், அரசியல், பொருளாதார, சமூக ஆய்வுகளையும் மற்றும் பல ஆர்வமூட்டும் அம்சங்களையும் உள்ளடக்கி மாதந்தோறும் வெளியாகும்

'சோவியத் நாடு'
'சோஷலிஸம்-தத்துவமும் நடைமுறையும்'

ஆகிய சஞ்சிகைகளைத் தவறாது படியுங்கள்.

✶ இந்த இரு மாசிகைகளையும் தபால் கட்டணமாக ஆண்டுக்கு ரூபா 12/-செலுத்திப் பெற்றுக்கொள்ளுங்கள்.

முகவரி:-
சோவியத் தூதரக தகவல் பிரிவு,
27, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்த.
கொழும்பு-7. 5167

கே. ஜி. எக்ஸ்பிரெஸ் பஸ் சேவை

சாயக்கூடிய, வசதியான, ஆடம்பரமான பஸ்கள் தினசரி கீழ்க்கண்ட இடங்களிலிருந்து புறப்படும்:

கொழும்பு / யாழ்ப்பாணம்
வெள்ளவத்தை மாணிக்க விநாயகர் கோவிலடி
லோரன்ஸ் ரோட் — இரவு 7-30 மணி
கோட்டை புகையிரத நிலையம் — இரவு 8-00 மணி

யாழ்ப்பாணம் / கொழும்பு
வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம் இரவு 8-00 மணி
முன்பதிவு செய்யும் இடங்கள்:
இராஜேஸ்வரி ஹோட்டல்,
69, நொறிஸ் றேட், கோட்டை.
தொலைபேசி: 25939 பிற்பகல் 2-00 மணிமுதல் இரவு 7-00 மணிவரை
பிளாசா தியேட்டர், வெள்ளவத்தை.
தொலைபேசி: 88070 பிற்பகல் 1-30 மணிமுதல் இரவு 10-00 மணிவரை
காமினி தியேட்டர், மருதானை.
தொலைபேசி: 93810 காலை 9-00 மணிமுதல் இரவு 10-00 மணிவரை
வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 559 காலை 8-00 மணிமுதல் இரவு 10-00 மணிவரை

கட்டணம் ரூ. 50/- (ஒரு வழி மட்டும்)

பயணம் செய்யும் போது பணத்தை உங்களுடன் எடுத்துச் செல்லவேண்டியதில்லை. கீழ் குறிப்பிட்ட இடங்களில் உங்கள் பணத்தை ஒப்படைக்கவோ பெற்றுக் கொள்ளவோ முடியும்.

★ பிளாஸா தியேட்டரில் ரூபா 1000/-க்கு உட்பட்ட தொகை ஒப்படைக்கவோ அல்லதுபெற்றுக் கொள்ளவோ முடியும்

கே. ஜி. இன்டஸ்ரீஸ்,
ஸ்ரீ சங்கராஜமாவத்தை,
கொழும்பு.
வெலிங்டன் தியேட்டர்,
யாழ்ப்பாணம்.

எத்தொகையும் ஒப்படைக்கவோ பெற்றுக்கொள்ளவோ முடியும்

★ காலை 6 மணிக்கு பஸ்கள் கொழும்பு/யாழ்ப்பாணம் சென்றடையும் 5133

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றேட், போன்: 7193. யாழ்ப்பாணம். தந்தி: வைரம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# புகைக்காத நெருப்புக்கள்

## சிவமலர் செல்லத்துரை

''என்ன முடிவு சொல்றீங்க?'' அனுஷாவின் சித்தப்பா மாப்பிள்ளையின் முகத்தையும் மாப்பிள்ளையின் அண்ணன் முகத்தையும் மாறி மாறிப்பார்த்தார். அண்ணன் மகளை வாழவைக்க வேண்டும் என்றஇதயச்சுமையால் ஏதோ பணத்தையும் பெண்ணையும் வாழ்வையும் அள்ளிக்கொடுக்கும் பெண்பகுதியிலிருந்தும் கூட தலைகுனிந்து குழைந்து பேசிய சகம் கேட்கும் நிலைமை... கரும்பு தின்னக் கைக்கூலி கொடுக்கும் பிழையான சமூகப் பழக்க வழக்கத்தை ஏற்றுக்கொண்டு அவர் குரல் கெஞ்சியது. என்ன தான் ஆணுக்குப் பெண் சமம் என்று பேசிக்கொண்டாலும் அது நடைமுறையிலில்லை என்பதை விளக்கப்படுத்தும் அனுபவம்... அதுதான் ஆணைப் பெற்ற மாப்பிள்ளைப் பகுதிக்குப் பெண்கொடுக்கும்தாம் இரண்டாம் பட்சமானவர் என்று குழைந்து தலைகுனிந்து மானத்தை விட்டுக் கொடுத்துப் பேசும் அனுபவம்... அதை அப்போது அனுஷாவின் சித்தப்பாவும் அனுபவித்துக் கொண்டிருந்தார்.

''இனி நாங்கள் என்னத்தைச் சொல்கிறது?'' என்று இடையில் புகுந்து கொண்டு பேசிய மாப்பிள்ளையின் தாயாரினுடைய குரலில் ஆணைப் பெற்ற ஆதிக்க உணர்விருந்தது.

மாப்பிள்ளை மௌனத்திலிருந்தாலும் அவனது இதயம் வேகமாக அடித்தது. முந்த நாள் சுகுமாரன்... அவன்தான் மாப்பிள்ளை. சிலாபத்திலிருந்து வந்தபின்னர் கல்யாணப் பேச்சுவார்த்தை மேலும் களை கட்டி விட்டது. நேற்று அண்ணு சம்பிரதாயமாகப் பெண்பார்க்கப் போய் வந்தார். அவர் பார்த்துவிட்டு வந்த நேரத்திலிருந்து அவர் வாயில் அந்த அனுஷாவைப் பற்றிய பேச்சுக்கள்தான்... உருவம், நடை, பேச்சு, சிரிப்பு எல்லாவற்றையும் 'ரெலிவிஷ'னில் பார்க்குமாப்போல் மனக்கண்ணில் விழும்படியாக வர்ணித்தார்... சுகுமாரின் மனம் நிறைய அனுஷாவைப் பற்றிய மயக்கம்தான்.

பேனவாரம் சிலாபத்தில் அவனது கந்தோரில் இருந்த போது அம்மா அவனது கல்யாணப் பேச்சு விவகாரம் பற்றிக் கடிதம் போட்டாள்.

அன்புள்ள மகனே;

உனது சுகத்திற்கு கடவுளை வேண்டுகின்றேன். இவ்விடம் நாங்கள் நல்ல சுகம்...மேலும் மகனே; நாங்கள் உனக்கு நல்லதையே செய்வோம் அது உனக்குத் தெரியும். நான் இவ்விடம் கொக்குவிலில் உனக்குத் ஒரு கல்யாணம் பேசியிருக்கிறேன். பெண்ணைப்பார்த்தால் கிளிப்பிள்ளை மாதிரி, படித்தவள், உத்தியோகம் பார்க்கிறாள். ஆனால் கல்யாணம்முடிந்தால், நீ அவளை உத்தியோகம் பார்க்க விடமாட்டாயென்பதைச் சொல்லிவிட்டேன். அவளுக்குப்பெயர் அனுஷாவாம். அவள் எங்களுடைய முத்துக்குமாரு அண்ணர் ''பிறின்சிப்''பலாயிருந்த பள்ளிக்கூடத்தில்தான் படித்தவள்... அவளுடைய போட்டோவும் இத்தோடை அனுப்புகின்றேன். எதுக்கும் நீயொருக்கால்வா... வந்து பார்...

இப்படிக்கு
பட்சமுள்ள அம்மா.

என்று அம்மா கடிதம் போட்டிருந்தாள்.

கடிதத்தைப்படிக்க முன்பே அத்துடன் கிடந்த புகைப்படத்தை ஒருமுறைக்குப் பலமுறை பார்த்து முடித்தபின் தான் சடிதத்தைப் படிக்கத் தொடங்கினான் சுகுமாரன். அந்தப் படத்திலிருந்த பெண், பார்ப்பதற்கு அம்மா எழுதிய மாதிரிக் கிளிபோலுமிருக்கவில்லை, குயில் போலும் இருக்கவில்லை ஒரு அழகிய நடிகையின் தோற்றத்திலிருந்தாள். வேண்டுமானல் அழகி கிளியோபாட்திரா என வர்ணிக்க ஆயத்தமாயிருந்தான் சுகுமாரன். ''ஏதடா இந்தப்போட்டோவைப் பார்த்தவுடன் இப்படியொருசுடுபாடாயிருக்கிறதே!'' என யோசித்தசுகுமாரனுடைய மூளையில் சில நிமிடங்களின் பின்னர் தான் அதற்கான காரணம் வந்து விழுந்தது. ஆமாம்! படத்திலிருந்த அனுஷா பழைய விநோதாவைப்போலல்லவா இருக்கிறாள். ஒரிஜினல் விநோதா கைதவறிப் போனாலும் இந்த 'டுப்ளிக்கேற்' விநோதாவாவது தவறாமல் அகப்பட வேண்டுமே!'' என அவனுள்ளம் இறைவனைப் பலமாக வேண்டியது.

விநோதாவின் குவிர்ந்த பார்வை, நினைவு வந்ததைத் தொடர்ந்து அம்மாவின் கோபப் பார்வை நினைவு வந்தது. அவனுக்கு விநோதாவிடம் ஒரு கொஞ்சக் கவர்ச்சி என்பதையும் அவளிடம்கொஞ்சம்கூட சீதனப் பணமில்லை யென்பதையும் கேள்விப்பட்டு அம்மா பார்த்த கோபப் பார்வையைஅவன் இன்னும் மறக்கவில்லை. காதலில் தோல்வி...... அதுபற்றிக் கண்ட நின்றவர்கள்கேட்ட கேள்வி...... என்பவற்றைச் சூழ்நிலை மாற்ற மூலம் விலக்கி வைக்கவும் மறந்துபோகவும் எண்ணிய விநோதா... வேறோர் காரியாலயத்துக்கு மாறி விட்டாள். அந்தச் சம்பவங்கள் நடந்து ஆறு வருடமாகி விட்டது அன்றே அவனுக்கு அம்மா கல்யாணம் பேசத்தொடங்கி விட்டாள், இன்னும் பேசிக் கொண்டிருக்கிறாள். விநோதா தான் போகட்டும். ''வேறு ஒரு பெண்ணாவது அவனுக்காக உலகத்தில் படைக்கப் படவில்லையா? என்று பெண் பார்த்து அலுத்துப் போய் சுகுமாரனும் யோசிக்கத் தொடங்கிவிட்டான்...... ஆமாம் இன்னும்தான் அப்படியொருத்தி அவனுக்கு அகப் படவில்லையே! வயதும் ஓடிக் கொண்டிருக்கிறது. அவனுக்கு அம்மா பெண் பார்க்கும் தன்மையைப் பார்த்தால் அவன் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்று சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்கும் நேரத்தில் கண்ணாடி போட்டு செயற்கைப் பல்செற் மாட்டிக்கொண்டு புதுமணப்பெண் ''தன்னந்தனிமையிலே தள்ளாடும் நிலையிலிலே உங்கள் பக்கத்துணை நானிருந்தால் இன்பம் போதாதோ எந்தனுக்கு'' என நடுங்கும் குரலில் பாடிவரும் சந்திப்புத்தான் அவனுக்கு ஏற்படும் போலிவிக்கிறது.

ஆறு வருஷம் முன்னால் அவனுக்கு அம்மா கல்யாணப் பேச்சை ஆரம்பித்த போது முதலாவது மணப்பெண்ணிடம் ஆகக் கூடினது காசாக ஒரு பத்தாயிரம் ரூபாதான் கேட்டாள். அதன் பிறகு நாணயப் பெறுமதி இறக்கம், வட்டிவீத உயர்வு, பண வீக்கம் நாணயப் புழக்க அதிகரிப்பு... சம்பள அதிகரிப்பு என்றெல்லாம் என்னென்னவோ பொருளாதார அநியாயங்கள் வந்து பெற்றோலுக்கும், மண்ணெண்ணெய்க்கும் மாவுக்கும் சீனிக்கும் மட்டும் விலையேறவில்லை; மாப்பிள்ளைகளுக்கும் விலையேறிவிட்டதாம். மாப்பிள்ளை விலை சுகுமாரன் தரவளிகளுக்கு காணி பூமி நகை நட்டை விட ஐம்பதாயிரம். பொருளுக்கு விலையதிகமானல் வாங்குவோர் தொகை குறைவதும் இயல்புதானே! ஆனபடியால் சுகுமாரன் மாதிரி சிலர் இனை[...]மாகிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஐம்பதாயிரத்துக்குள் சட்டப்படி கல்யாணப் பதிவின்போது எழுதுப்படுகிறதும் எழுதாமல் விடப்படுகிற மறுப்புச் சந்தை விலையான நன்கொடைப் பணமும் அடங்கிவிடும். சீதன விஷயம் அவ்வளவோடு நிற்கவில்லை சுகுமாரனின் தாயார் கூறிய வரையறைக்குட்பட்ட சீதனத்தைக் கேட்டுப் பெண்ணைப் பெற்றவர்கள் திகைத்திருக்கும் வேளையில் ''நகை நட்டு விஷயமாக நானெதுவும் பேசவில்லை. உங்களுடைய பிள்ளை அழகாயிருக்கக்கூடியமதிரி கை, காது, கழுத்துக்கு நீங்கள் விரும்பியதைக் கொடுக்கலாம். ஒரு அட்டியலும் சங்கிலிப் பதக்கமும் கட்டாயம்... மற்றது உங்கள் இஷ்டம்'' என்று சொல்லி அந்தப் பெண்ணின் பெற்றோரை சுகுமாரனின் தாய் பயமுறுத்தி விடுவதால் கல்யாணப் பேச்சு வார்த்தை அவ்வளவோடு நின்றுவிடும். சுகுமாரனுக்கும் பெண்களைப் பார்த்துப் பார்த்தே பெண்ணாசை போய் விட்டதுபோல் ஒரு அலுப்பு. ஆனால் அனுஷாவின் படத்தைப் பார்த்தபோது மறுபடி வாழ வேண்டும் என்ற உணர்வும், விநோதாவைப் பார்ப்பது போன்ற உற்சாகமும் வாழ்க்கைப் பிடிப்பும் வந்தன.

சுகுமாரனின் காரியாலயத்தில் வேலை பார்க்கும் மல்லிகாவும் அனுஷா படித்த பாடசாலையில் படித்தவள். அவளிடம் அனுஷாவின் படத்தைக் காட்டி சுகுமாரன் விசாரித்த போது அவள் துள்ளிக் குதித்தாள். கதை கதையாகக் கொட்டித் தீர்த்தாள். அவர்கள் இருவரும் ஆப்த நண்பிகளாம்... மொத்தத்தில் காணமுன்பே அனுஷா சுகுமாரனின் இதயத்தில் இடம் பிடித்தாள். சுகுமாரன் சிலாபத்திலிருந்து வரும்போது இதுவும் தவறினல் இனிப் பெண் பார்ப்பதில்லை என்ற தீர்மானத்துடன் தான் வந்தான். நேற்று அண்ணு பெண்பார்த்து விட்டு வந்தவுடன் அம்மாவும் அண்ணுவும் பேசிக் கொண்டது சுகுமாரனின் மனதைத் தொட்டது. ''அதுசரி தம்பிக்குப் பெண்ணைக்காட்ட [...]'' அம்மா கேட்டாள், ''நாளைக்குப் பெண்ணின் சித்தப்பாக்காரன் சீதன முடிவு கதைக்க வருவார். அவரும் நாங்களும் சீதனத்தைத் திடப்படுத்திக் கொண்டால் பெண்ணைக் காட்டத்தான் வேணும்'' என்றார் அண்ணு.

''இனியென்ன சீதனப்பேச்சு நாங்கள் கேட்டபடி இனும் முப்பதும் காசாக இருபதும் மற்றப்படி நகை நட்டுக்காணி பூமியெல்லாம் தாறதாக அவை சொல்லியாச்சே!'' என்றாள் அம்மா.

''இல்லை இருபத்தைந்தைக் காசாயும் இருபத்தைந்தை இனமாயும் தரப்பார்க்கினம். முப்பதை இனமாத்தரக் கொஞ்சம் பின்னிற்கினம்'' என்றார் அண்ணு.

''அதிலையென்ன ஐயாயிரம் மாறினலும் காசாக ஐம்பது கிடைக்கிது தானே! நாங்கள் எதிர்பார்த்தது இனும் இருபத்தைஞ்சும் காசு பதினைத்துமாக நாற்பதுதானே... இப்ப இவ்வளவே மிச்சம்...... இனி இதிலை பிடிவாதம் வேண்டாம்... என்றாள் அம்மா...... அவளே தொடர்ந்து ''பெண்ணைத் தம்பிக்கு என்னமாதிரிக் காட்டுறது?'' என்ளுள்.

இவர்களெல்லாம் என்ன புதுமையாகக் காட்டப்போகிறார்கள். அவள்தான் என் மனக்கண்ணில் தெரிகிறாளே என எண்ணினான் சுகுமாரன். ''அந்தப்பிள்ளையை நல்லூர்க் கோயிலுக்கோ அல்லது ஏதும் தியேட்டருக்கோவரச் சொல்லி தம்பியும் நாங்களும் அங்கே போய்ப்பார்க்கலாம் என்றார் அண்ணு.

''தியேட்டருக்கு வேண்டாம் கோயிலுக்கே வரச் சொல்லுவோம்'' என்றாள் அம்மா.

இன்றைக்கு எதிர்பார்த்தபடி அனுஷாவின் சித்தப்பா சீதனவிவகாரத்தைக் கதைத்து ஒரு முடிவெடுக்க வந்துவிட்டார். அம்மாவும் அண்ணுவும் அந்த சித்தப்பாக்காரனும் சீதனம் சம்பந்தமாகக் கதைத்ததைக்கூட சுகுமாரனின்மனம் சட்டை செய்யவில்லை. அது கற்பனையில் அனுஷாவைப் பார்த்து இரசித்துக்கொண்டிருந்தது. அனுஷா அவன் முன் ஓடிக்கொண்டும் ஆடிக்கொண்டுமிருந்தாள். எல்லாம் அவன் கற்பனையில் மட்டும்தான்.

உண்மையில் அனுஷா அந்த வேளையில் தன் வீட்டு முற்றத்தில் முன்புறப்படிக்கட்டோடு இருந்த தூணென்றில் சாய்ந்தபடி சிலையாக நின்றாள். அவளது மனம் மாப்பிள்ளை வீட்டார் முடிவு கேட்கப்போயிருந்த சித்தப்பா நல்ல முடிவோடு வரவேண்டுமே என்ற தவிப்பிலிருந்தது. அவளது மனதில் முந்தாநாள் சம்பவம் நிழலாடியது.

''அனுஷா இங்கேவா. இந்தப்படத்தைப்பார்'' என்று அம்மா அனுஷாவிடம் ஒரு புகைப்படத்தைக் கொடுத்தாள். அந்தப் புகைப்படத்திலிருந்த அழகனைப் பார்த்து ''ஓ, அழகாக இருக்கிறார்'' என்று மனதோடு சொல்லிக் கொண்டாள் அனுஷா, அவளுக்கு அதை வெளியேசொல்ல முடியவில்லை அவள் வருங்கால கணவன் பற்றித் தோழிகளுடன் கதைகதையாக பேசிய நினைவு வந்தது.

''இந்தக்காலத்து ஆண்களில் ஆண்மையே இல்லை. ஏதோ நெத்தலிக் கருவாடு போல் வரண்டு தடிக்குச்சி போலிருக்கிறார்கள், பத்துருத்தல் இறைச்சி கூட அனேக ஆண்களின் உடம்பில் இல்லை. நடு இரவில் இப்படிப்பட்ட ஒருத்தனைத் துணைக்கூட்டிக் கொண்டு தனியே எங்காவது போய்வரக் கூட முடியாது. ஒரு கள்வனை அல்லது காடையைக் கண்டால் போதும். மனைவியையும் அந்த இடத்திலேயே விட்டுவிட்டுப் பயந்தோடிவிடுவான் ... ஆமாம் ... இன்றைக்கு ஒவ்வொருத்தனுக்கிருக்கிற மனப்பலமும் உடல் பலமும் அவ்வளவுதான்... சோப்பேறிகள், தூங்குமூஞ்சிகள், ஒரு இரண்டு கட்டை விறகு கொத்திப் போடச் சொல்லிப்பார்... அவர்களுக்கு முடியாது... ஒரு பயணம் போகும்போது பெட்டிபடுக்கை சுமக்கவாவது இவர்களுக்கு முடியுமா? ஹூம் அது கூட முடியாது... அதுவும் மனைவி தான் சுமக்கவேணும் ... இப்படிப்பட்டவனை நான் கட்டிக் கொள்ளமாட்டேன. நல்ல உடல்பலமும், திடமனமும், பகுத்தறிவும், உடலுழைப்பும் உள்ளவனைத்தான் நான் கட்டிக் கொள்வேன்'' என்று அன்று ஒவ்வொரு தோழிகளும் சொன்னார்கள்.

அனுஷாவும் கூட அதை விரும்பினாள் அவள் எதிர்பார்த்தபடி. அவனும் படத்திலிருந்தான் அவன் கண்களின் பிரகாசம் உல்லாசமாயிருந்தது. மென்முறுவல் பெருந்தன்மையைக் காட்டியது. அவன் உடல் தோற்றத்திலே ஆஜானுபாகுவாயிருந்தான். ''சங்கைத்தலைவரே! சபைக்கேற்ற இராசாவே!'' என்று வயதான பெண்கள் வர்ணிப்பார்களே ...அத்தகைய தோற்றம் அவனுடையது ஆண்மையும் சுறுசுறுப்பும் புகைப்படத்தினுள் அடங்கிப் போயிருந்தன. சொல்லப்போனல் அனுஷா அந்தச் சுகுமாரனைக் காணுமலே அவனிடம் மயங்கிப் போய்விட்டாள்.

மகள் படத்தைப்பார்த்துப் பதிலேதும் சொல்லவில்லை. ஆனாலும் மகளின் மௌனம் தாய்க்குச் சம்மதத்தைத் தெரிவித்தது. அனுஷாவின் முகமெங்கும் நாணம் செங்கோலமிட்டது. அவளுதட்டில் பட்டும் படாமலும் படர்ந்திருந்த முறுவல் அவளுடைய இதய திருப்தியைக் காட்டியது. அனுஷா தலை நிமிராமலே சாயவுப்பார்வையில் அம்மாவின் முகத்தை அளந்து பார்த்தாள். அந்தத் தாய்முகத்தில் தான் எவ்வளவு பெருமிதம்? பின்னேயென்ன? பெண்ணைப் பெற்று வளர்த்துப் படிக்க வைத்துக் கல்யாணமும்செய்து வைக்கப்போகிறாளே அந்தத் தாய்— அவளுக்குப் பெருமையாயிராதா? பெண்ணைப்பெற்றவளின் இலட்சியக் கனவு ஈடேறும் காலமே அதுதானே! பிறர் பார்த்துப் பொறாமைப் படக்கூடியவனைத் தன் பெண்ணுக்காகத் தெரிவுசெய்து மணமுடித்து வைத்து பிறர் பாராட்டும் வண்ணம் வாழவைத்துப் பார்த்து மகிழ்வது தானே அன்னையான பெண்ணின் அடியன ஆசை... ஒரு நல்ல அப்பனுக்கும் தன்பெண்ணைப் பொறுத்து வேறென்ன ஆசை... இருக்க முடியும்...? அந்த இலட்சியத்துக்காகத் தானே பெண்களைக் கண்ணுங் கருத்துமாகக்கவனித்து அழகும் ஒழுக்கமுமுடையவர்களாக வளர்க்கிறார்கள். தங்கள் தேவைகளையும் ஆசைகளையும் குறைத்துக்கொண்டு பிள்ளைகளின் தேவைகளைக்கவனித்து மீதப்படுத்திச் சேமித்தும் வைக்கிறார்கள்.

''பெற்றவர் இஷ்டப்படி மணப்பது கர்னாடகம்... நான் விரும்பிய மாப்பிள்ளையை மணப்பதுதான் சீர்திருத்தம்... இவன் வேண்டாம்... அவன் வேண்டும் என்று அனுஷா போருக்குக் கிளம்பாமல் அமைதியாக நடந்துகொண்டதே எனக்குப்பேரானந்தம்... அதற்காகவே நான் எவ்வளவு சீதனமென்றாலும் கொடுத்து அவளுக்கு இந்தக் கல்யாணத்தைச் செய்துவைக்கவேணும்'' என்று அம்மா ஒற்றைக்காலில் நின்றாள்.

தூற்றுக்குத் தொண்ணூறு வீதம் கல்யாணம் நிச்சயமான

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப்பணியில் பெண்களின்பங்கு

## துரை எங்கரசு பி. ஏ. (சிறப்பு)

சமூகப் பணிகள் பரந்து பட்டவை. இதனை தன்நலம் கருதாது பிறர்நலம் கருதிச் செயல்படும்போதுதான் இதன் தூய்மை துலலியமாகிறது. இதற்கு பொறுமை, பெருந் தன்மை, தூயசிந்தனை ஆகியன இன்றியமையாத குணாம்சங்களாகும். இக்குணாம்சங்கள் பெண்களிடத்தே இயல்பாக அமைவதனால் சமூகப்பணிகளுக்கு அவர்களின் பங்களிப்பு தவிக்கமுடியாததாகின்றது.

பெண்கள் அன்று அடிமைகளாகக் கருதப்பட்டார்கள். கல்வி புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருந்தது. இளவயதில் குடும்பப்பெண்கள் ஆனார்கள். குடும்பச் சுமையை ஏற்றார்கள். இதனால் அவர்கள் வாழ்க்கை ஒரு குறுகிய வட்டத்துக்ளே அமைந்தது. இந் நிலைமை இன்று மரபுறிவிட்டது. எங்கும் எதிலும் பெண்களுக்குச் சமவுரிமை வழங்கப் பட்டுள்ளன. பெரும்பான்மையோர் கல்வி கேள்விகளிலும் சிறந்து விளங்குகின்றமையையும் காணலாம். சகல துறைகளிலும் முதன்மை நிலையை அடைந்துள்ளமை சமூகப் பணிக்குப் பெண்களைத் திரட்டித் தந்துள்ளதென்று கூற வேண்டும்.

பெண்கள் எத்தகையசமூகப் பணிக்குப் பொருத்தமானவர்கள் என நோக்குதல் சாலச் சிறந்ததாகும். பெண்கள் உடற் பலம் குறைந்தாலும், உளப்பலம் கூடியவர்கள். மதி நுட்பம் நிறைந்தவர்கள். உலகில் மொத்தச் சனத்தொகையில் பெண்களின் எண்ணிக்கை ஆண்களைவிடக் கூடுதலாக இருப்பதனால் சமூகத்தின் தேவைகளுக்காகப் பெண்களையும் ஈடுபடுத்தவேண்டியது மிகவும் முக்கியமாகிறது.

### பெண்களின் உளப்பாங்கு மானிடத்தை வென்றுவிடுகிறது

பெண்கள் சமூகத்துக்கான தம் பங்களிப்புகளைச் கூட்டுக்களாக அல்லது இயக்கங்களாக மேற்கொள்வதன்மூலம் எளிமைப்படுத்தலாம், துரிதப்படுத்தலாம்.

பிள்ளைகளைப் பராமரித்தல், அந்நியகாலச் சேவைசெய்தல், நோய்பிணி உற்றோருக்கு உதவுதல், பாடசாலைப்பணிகள், மத கலாச்சார ரீதியான பணிகளும் சிறப்புற அமைவதற்குப் பெண்களே மிகவும் சிறந்தவர்களாகக்கணிக்கப்படுகிறார்கள். இது அவர்களின் உளப் பாங்கிற்கு ஏற்ப சிறப்பாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. மற்றும் அவர்களின் உடற் பாங்கிற்கு ஏற்ப மென்மையான தொழில்களையும், மதிநுட்பமான தொழில்களையும் அவர்கள் வசம் ஒப் படைப்பதன்மூலம் அதனைச் சிறப்புறச் செய்வார்கள் என லாம்.

ஆண்டாள், திலகவதியார் போன்றவர்கள் சமயங்களின் வழிநின்று மக்களின் ஈடேற்றத்திற்குச் சமூகப்பணியாற்றிய பெண்கள் ஆவார்கள். சமயங்கள் ஒழுக்கம், வாழ்க்கை நறி, நற்பண்புகளையே தம் இலட்சியங்களாகக்கொண்டவயாகும். இவ்வொழுக்க நெறிக்கு வழிகாட்டிய ஆண்டாளும். திலகவதியாரும் தன்மை நிலைமை பெற்றது போல் ஆரம்ப காலத்தில் ஐரோப்பிய சமூகத்தாரிடையே கிறீஸ்தவம் பரவலாக்கப்படுவதற்குஅந்நாடுகளிலும் பெண்களின் சமூகப்பணி பெரிதும் சிறப்பாக அமைந்துள்ளதை வரலாற்று உண்மைகள் மூலம் நமே அறியக்கூடியதாக இருக்கின்றது. அண்மையில் 'திரேசா' அம்மையாருக்கு வழங்கப்பட்ட நோபல்பரிசு கூட அவரது சமூகப்பணியின் தூய்மைக்கும், புனிதத்திற்கும். வழங்கப்பட்ட சிறப்பு என்றே கொள்ளலாம். திரேசாஅம்மையார் தன் வாழ்நாளில் சிறுவர் முதல் வயோதிபர் ஈறுகஅவர்களுக்கு உதவி புரிவதே தமது புனித இலட்சியமாகக் கருத்தில் கொண்டிருந்தார். இத்தகைய புனித இலட்சியத்திற்கு நோபல் பரிசு வழங்கப்பட்டதன்மூலம் சமூகப்பணியின் மேன்மை மேலும் மக்களுக்கு புனித சேவையாக்கருதப்பட்டு வருவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

### கிராமியமட்டத்திலிருந்தே சமூகப்பணி வளர்த்தெடுக்கப்படவேண்டும்

சமூகப் பணியின் ஆரம்ப வளர்ச்சியானது கிராமியமட்டத்திலின்றும் வளர்த்தெடுக்கப்படல்வேண்டும். அங்குதான் மக்கள் பெருக்கமும், கல்வி, கேள்வி, பொருளாதாரத்தில் பின்னடைந்தவர்களும், மரபு ரீதியான சமூகப் பழக்கவழக்கவழக்கங்களை மேற்கொள்வோரும் தற்கால அமைப்புக் கேற்பக் கொள்கையை மாற்றுதோரும் இருப்பதைக் கண்கூடாகக் காணலாம், இவர்களிடத்தே ஒரு சிறந்த அமைப்புக்களை அல்லது மாதர் முன்னேற்றச் சங்கங்கள் பெண்கள் சமூகத்துக்கு எவ் போன்ற இயக்கங்களை உருவாக்கி மக்களின் அன்றாட தேவைகள், நாட்டின் தேவைகள் போன்றவற்றை எடுத்துரைத்து அவர்களைப் பொருளாதார சுபீட்சநிலைக்குக்கொண்டு வரவேண்டும். ஒவ்வொரு பெண்களையும் ஏதாவது ஒரு தொழிலில் வினைத்திறன் மிக்கவர்களாக்கவேண்டும்.

சிறுகைத்தொழில் களான நெசவுக்கைத்தொழில், தையல் வேலை, பனம்பொருட்கள் தொடர்பான சிறு கைத் தொழில்கள், மற்றும் விவசாய உற்பத்திகள் போன்றவற்றில் பெண்கள் ஈடுபடலாம், இதனால் அவர்கள் தம் காலிலேயே நிற்கும் வலுவை அடைவார்கள்.

மக்களின் வளர்ச்சிக்கட்டம் உன்னத நிலையையடையும் போது எதனையும் சாதிக்கும் தனிதிறமையை பெற்றுவிடுவார்கள். இன்று மலிந்துள்ள சீதனப் பிரச்னை, சாதிப்பிரச்னைகளைக்கூட வளர்ச்சிடைந்த பெண்களின் இயக்கங்களின் மூலம்தான் சுலபமாக வெற்றியடையச்செய்யலாம். அவர்கள் தான் இத்தகைய சமூகப் பிரச்னையை வென்றெடுக்கவும் வேண்டும். இவ்வாறு நோக்குகின்றபோதுபெண்களின்கடமைப்பாடே சமூகத்தில்முதனிலையாய்உள்ளதைநோக்கலாம்.

பொதுப்பணிகள் எவற்றையும் திறம்பட செயலாற்றும் வல்லமை பெண்களிடம்தான் உண்டு. இனிய சுபாவம், ஆதரவான பேச்சுக்கள் மக்களை இலகுவில் கவரக்கூடியனவாகவும், உண்மைகளை ஒப்புவிப்பனவாகவும் அமைவதால் மக்கள் ஒருமுகப்படுத்தப்படுகிறார்கள். எடுத்த காரியங்கள் இனிது நிறைவேறுகின்றன. சிறப்புற நோக்குகின்றபோது

தொலைக்காட்சி, ஏழை நாடாகிய இலங்கைக்கு உகந்த தொரு பொழுதுபோக்குச் சாதனமல்ல என்ற நெடுநாளைய கருத்தை முறியடித்து இன்று ஒரு ரூபா செலவில் அதனைப் பார்த்து அனுபவிக்கக்கூடிய நிலை உருவாகியுள்ளதை எண்ணும்போது, தொலைக்காட்சியோடு சேர்ந்த வீடியோ படக்காட்சி உபகரணத்தை நம்மிடையே நடமாடச் செய்யும் தொழில் நுட்பக் கலைஞர்களை, குறிப்பாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்களை வாழ்த்திப் போற்றாமல் இருக்கமுடியாது.

தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப்பெட்டி போன்று, ஒரு வீட்டில் இருக்கவேண்டியதொன்று. இப்பெட்டி சுமார் 2000/- ரூபாவிலிருந்து 40,000 ரூபா வரை பல்வேறு விலைகளில் உள்ளதெனக் கூறப்படுகிறது. ஒரு தரமான பெட்டியை சுமார் 5000/- ரூபாவிற்கு வாங்கலாம். இதற்கான ஆண்டு வரி ரூபா 250/-. இந்தளவு செலவில் ஒருபெட்டி வாங்கி வீட்டில் வைத்துப் பொழுதுபோக்கும் செல்வநிலையில் இருப்பவர்கள் மிகச் சிலரே எனவேதான், வட பகுதியில் தொலைக்காட்சிப் பெட்டி அறிமுகமாகி மிகக் குறுகிய காலத்தில், மலிவான

வளவோபணிகளை ஆற்றிஇருக்கிறார்கள்- ஆற்றிக்கொண்டும் வருகிறார்கள். இதனை உலகின் இன்றைய தேவைகளினின்றும் தவிர்த்துவிடவும்முடியாது.

---

## இலங்கையில் மத்திய வகுப்பின் தோற்றமும்வளர்ச்சியும்

# மத்திய வகுப்பினர்மீது ஆங்கிலக் கல்வி ஏற்படுத்திய தாக்கம்

## தி. வெற்றிவேலுப்பிள்ளை பி. ஏ. (சிறப்பு)

ஆங்கிலக் கல்வியானது வெவ்வேறு சமூகக் குழுக்களுக்குமிடையே ஆழ்ந்த சிந்தனையையும், உணர்ச்சியையும் ஏற்படுத்தியது. ஆங்கிலக் கல்வியானது அரசாங்க நிர்வாகத்தில் உயர்ந்த பதவியைப் பெறமட்டும் பயன்படாது, சமூகத்திலும் உயர்ந்த அந்தஸ்தைப் பெறவாய்ப்பளித்தது.

மேற்கத்தைய நாடுகளில் இலங்கையர் பெற்ற ஆங்கிலக் கல்வியானது அவர்களை அரசியல் அரங்கில் பங்கு கொள்ளவும், அரசியல் அதிகாரத்தைப் பெறவும் வழி காட்டுவதாகவும் அமைந்தது.

பிரித்தானிய ஆட்சிக்காலம் முழுவதும் தமிழர்கள் அரசாங்க உத்தியோகங்களைப் பெற்று, பறங்கியருடன் போட்டியிட்டு ஏனைய சமூகங்களிலும் பார்க்க ஒருபடி முன்னேறிச் சென்றனர்.

1945-ம் ஆண்டு அமைக்கப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி உயர்தர மத்திய வகுப்பு (Upper Middle Class) தமிழர்களை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது.

1948-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்திற்கு ஆதரவாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி வாக்களித்தமையினால், இதுவரை காலமும் தமிழ் மத்திய வகுப்பினரின் பரந்த ஆதரவைப் பெற்றுவந்த இக்காங்கிரஸ் கட்சியானது மக்கள் மத்தியில் ஆதரவை இழக்கத் தொடங்கி 1960-ம் ஆண்டில் அக்கட்சியின் தலைவரான ஜி. ஜி. பொன்னம்பலம் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சியினால் தோற்கடிக்கப்பட்டார். இதன் பின்னர் தமிழ் மத்திய வகுப்பினர் மத்தியில் இலங்கைத் தமிழரசுக் கட்சி அரசியல் ரீதியில் செல்வாக்குப் பெறத்தொடங்கியது.

கிராமப் பகுதிகளில் வாழ்ந்த மத்திய வகுப்பினர் ஆங்கிலக் கல்வியைப் பெற்று அதன் மூலம் செல்வம், அந்தஸ்து, அதிகாரம் ஆகியவற்றைப் பெறுவதையே தமது நோக்காகக் கொண்டு செயல்பட்டு வந்தனர். கிராமங்களில் வாழ்ந்த சிங்கள மத்திய வகுப்பினர் ஆயுர்வேத வைத்தியர்களாகவும், ஆசிரியர்களாகவும், சிறிய கடைக்காரர்களாகவும் (Small Shopkeepers) தொழில்புரிந்துவந்தனர்.

ஆயுர்வேத வைத்தியர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு 1956-ம் ஆண்டிலிருந்தே சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து அரசாங்கத்தால் அளிக்கப்பட்டதென்று கூறலாம். அதற்கு முன் மேற்கத்தைய வைத்தியமுறையே ஆயுர்வேத வைத்தியத்திலும் பார்க்கத் தலைசிறந்ததாகக் கருதப்பட்டு வந்தது.

1956-ம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கிராமங்களில் வாழும் மத்திய வகுப்பினரின் நிலைமையை எழுச்சியடையச் செய்து, உயர்த்த ... அவர்களைக் கொண்டுவருவதாகக் குறிப்பிட்டிருந்தது.

### யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மத்திய வகுப்பினர்

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வாழ்ந்த உயர்தர மத்திய வகுப்பினர் 1850-ம் ஆண்டிலிருந்து ஆங்கிலக் கல்வியைக் கற்பதில் கூடுதலான அக்கறை செலுத்தி வந்தனர். ஆங்கில மிஷனரிமாரின் கல்விமுறையானது யாழ்ப்பாணத்து மக்களிடையே பெருமளவில் செல்வாக்கினை ஏற்படுத்திசமூகத்திலும் மாற்றங்களை ஏற்படுத்திவந்தது.

மிஷனரிக் கல்வியின்மூலம யாழ்ப்பாணத்து மக்களுக்கு அளிக்கப்பட்ட ஊக்கமானது 20-ம் நூற்றாண்டின் முதற் காற்பகுதியில் (First Quarter of the 20th Century) அவர்களுக்குப் பல முன்னேற்றத்தைக் கொடுத்தது.

ஆங்கிலக் கல்வியின் உதவியினால் யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் மிக அதிகளவில் உத்தியோகங்களை பெற்றுவந்தனர். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மத்திய வகுப்பினர் சிறந்த எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும், கலாச்சாரம், ஆங்கிலம், தமிழ் ஆகிய துறைகளில் பாண்டித்தியம்பெற்றவர்களாகவும் காணப்பட்டனர்.

ஆசியாவிலேயே முதன்முதலாக பிரிட்டிஷ்காரரால் வழங்கப்பட்ட 'நைற்' பட்டத்தைப் பெற்றவராக யாழ்ப்பாணத் தமிழரான சேர். முத்துக்குமாரசுவாமி விளங்கினார்.

இவர் உயர்தர மத்திய வகுப்பைச்சார்ந்தவர். யாழ்ப்பாணம், இலங்கையின் ஆங்கிலக் கல்வியின் கேந்திர ஸ்தானமாகவிளங்கியது. மானிப்பாய், இணுவில் போன்ற இடங்களில் மிசனரிமாரால் நிறுவப்

(9-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புதுமைத் தொலைக்காட்சியும் புதுத் தமிழ்ப் படங்களும்

பொழுதுபோக்குச் சாதனமாக வீடியோ காட்சியாக- மாறிற்று. இலங்கைப் பக்கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்படுமென எதிர்பார்க்க முடியாத புத்தம் புதிய தமிழ்ப்படங்களைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தால் இதற்குக் குடாநாட்டின் மூலை முடுக்குக்களெல்லாம் அன்பான வரவேற்பு இருந்தது. மகிழ்ச்சிகரமான நாட்கள் நீடிப்பதில்லை.

தனக்குச்சாதகமாக, இலாபகரமாக இல்லாத எதையும் தடுத்துவிட முயல்வதுமனிதன் இயல்பு.

படமாளிகைச் சொந்தக்காரரின் போர்க்கோலம்! உள்ளூராட்சியாரின் எதிர்ப்புக் குரல்கள்!! ஊர்க்காவல் படையினரின் செடுபிடி!!! இவையாவையும் அமைதியாகப் பார்த்துக்கொண்டு வாளாவிருக்கும் அல்லது வழிகாண முயலும் அரசு!

எல்லாமே சேர்ந்த ஒரு சமுதாய மாற்றம்!

பொதுநல மன்றங்கள் நிதியுதவிக்காக ஏற்பாடுசெய்யும் வீடியோ காட்சிகளின்போது, சுடச்சுடப் புதிய தமிழ்ப்படங்களைப் பார்க்கும் ஆவலில் ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கூடுமிடத்தில், நிகழ்ச்சியைச சவ்வனே டத்தவதும் கட்டுப்பாடுகள் வைப்பதும் சுலபமான காரியமல்ல. இந்நிலையில் சில வருடங்களில் சில அசம்பாவிதங்கள் இடம் பெற்றன. உண்மை. இவற்றைச் சான்ருசக்கொண்டு ஒரு சுகமான பொதுசனப் பொழுதுபோக்குச் சாதனத்தைத் தடைசெய்ய முயல்வது

## எஸ். பி. கிருஷ்ணன்

தார்மீகமல்ல என்பது ஒரு சாரார் கருத்து.

ஏனைய நிபந்தனைகளுக்குட்பட்ட, கட்டுப்பாடுகளுக்குட்பட்ட, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைப்போல இதனையும் அனுமதிக்சலாமே என்று மற்றொரு கருத்து.

எப்படியாவது ஒரு ஒழுங்கு முறையின் கீழ், வீடியோ காட்சியை, சாசாரண மனிதன் பார்க்க அனுமதிக்காத வரை பிரச்னை தீர்வதற்கில்லைப்போல் தோன்றுகிறது.

வடபகுதியில் இருக்கும் தொலைக்காட்சிப் பெட்டியில் தென்பகுதியில் நெறிப்படுத்தப்படும் காட்சிகளைப் பார்க்க முடியாத காரியம். தென் இந்திய நிகழ்ச்சிகளையும் இங்கு எப்போதுமே, தெளிவாகப் பார்க்கமுடியாது. இந்நிலையில் பெருமளவு பணம் கொடுத்து வாங்கிய தொலைக் காட்சிப் பெட்டிகளை வைத்திருப்பதில் என்னபயன்? எனவே தான் அவர்கள் ஒன்றிணைந்து மன்றமமைத்துச் செயல்பட முன்வந்துள்ளார்கள்.

1950-ம் ஆண்டுகளில் மேல் நாடுகளில் பரவலாகப் பாவனைக்கு வந்த தொலைக் காட்சி இன்று பயன்தரும் பல நோக்குச்சாதனமாக வளர்ச்சியடைந்திருப்பதை நாம் கவனிக்கவேண்டும். சென்ற ஆண்டில் தொலைக்காட்சியை அறிமுகஞ்செய்துவைத்த எங்கள் அரசு சொன்ன பயனுடைய திட்டங்களையும் நாம் மறந்துவிடவில்லை. அரசு சொன்ன தொலைக்காட்சித் திட்டங்கள் எதுவும் செயலுருப் பெற்றதாகவும் தெரியவில்லை.

அமெரிக்காவில் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் தொலைக்காட்சிப் பாவனை அதிகரித்தபோது அது பலருக்கு ஒரு 'சுசப்பு மாத்திரை' யாகவே தென்பட்டது, இளம் உள்ளங்களை - மாணவர்களை- சுயமாகச் சிந்திக்கவிடாது யந்திரமாக்கிவிடும் என்றும், 'அமைதியின்மையைத் தோற்றுவிக்கும் என்றும் எதிர்ப்புக்கள் எழுந்தன. எதிர்ப்புகளுக்கு மத்தியிலே தொலைக்காட்சி. கற்பித்தலை விருத்திசெய்யுப சாதனமாக்கப்பட்டது.

கொலம்பியாவில் இரு ஆசிரியர்கள் அரச நன்கொடையுடன் ஒரு நிறுவனத்தைத் தோற்றுவித்தார்கள். 300 மாணவர்களுக்கு இரண்டு பாடங்களைப் போதித்தார்கள். இன்று இந்நிலையம் ஆயிரம் மடங்கு விரிவடைந்துள்ளது. மூன்று லட்சம் குடியிருப்பாளர்களும், பாடசாலைகளும் பயனடைகின்றன. தென்கரோலின் கல்வி திணைக்களத்தின் அவதானிப்பின் கீழ் 150-க்கு மேலான பாடங்கள் மாணவரைச்சென்றடைகின்றன. 10,500 ஆசிரியர்கள் இத்திட்டத்தில் பணி புரிகிறார்கள். அந்நகரின் 650,000 வளர்ந்த மாணவரில் மூன்றில் ஒரு பங்கினர் சிறப்புப் பாடங்களைப் பயிலுகின்றார்கள். வீட்டிலிருந்தபடியே பல்லாயிரம் பேர் சிரேஷ்ட வகுப்புக்களைச் சித்தியடைந்துள்ளார்கள், தொடக்கப் பள்ளிச் சிறுவர்களுக்கு காலை வகுப்பு, மேல் வகுப்பு மாணவருக்கு மாலை வகுப்பு. வைத்தியசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழில் நுட்ப நிலையங்களுக்கு இரவு வகுப்புக்கள் சமீபகாலத்தில் 350 பேர் அங்கே தொலைக்காட்சி கல்வி மூலம் வணிகத்துறையில் சிறப்புப் பட்டம் பெற்றுள்ளார்கள்.

தென்கரோலினாவின் தொலைக்காட்சி முறையை

(9ம் பக்கம் பார்க்க)


### நம்பிக்கை

நாம் புத்துயிர் பெறவேண்டுமானால், புத்துயிர்பெறுவோம் என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும். அந்த நம்பிக்கையைச் செயலில்கொண்டுவரவேண்டும். அந்தச் செயலோ, சுயமானதாயிருக்க வேண்டும். மற்றவர்களைப் பார்த்து நகல் செய்வதாயிருக்கக் கூடாது. -மாஜினி


அதி சக்தி மிகுந்த இரு சக்கர உழவு யந்திரங்கள்
தற்பொழுது இலங்கை வந்துள்ளன

0 குதிரைப்பலமுள்ள

"சக்தி"



இந்தியாவில் வெற்றியீட்டிய 10. கு. ப. 'சக்தி' இலங்கைப் பண்ணைகளிலும் தனது திறனை நிருபித்துள்ளது. இவை மகா இலுப்பல்லமையில் உள்ள உழவு யந்திரப் பரீட்சை நிலையத்திஞல் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

தற்சமயம் பண்ணைகளிற் பாவனைக்குள்ள 5/6 கு. ப. உழவு யந்திரங்களை விட 'சக்தி' பல நன்மைகள் கொண்டவையாகும்.

- கு. ப. வரிசையில் லாபகரமானது.
- விரைவான இயக்கத்திஞல் நேரத்தை மிதமாக்குகிறது.
- ஏக்கர் அளவில் உழுவதிற் சிக்கனமானது.
- உலர்ந்த, கடின நிலத்திலும் திறம்பட இயங்குகிறது.
- ஈரலிப்பு, சதுப்பு வயல்களிலும் இலகுவிற் கையாளவல்லது.
- பாரிய சுமைக்கு விசாலித்த இடமும், ஏற்றி இறக்க ஏற்ற விரைவும் பூண்டவை (2 தொன்)
- குறைந்த பராமரிப்புத் தொல்லைகள் உடையவை

யப்பானிய 'மிற்சுபிஷி' கெவி இண்டஸ்ரீஸ் கூட்டுத் தயாரிப்பிலானவை

'சக்தி'- சக்தி மிகு இரு-
சக்கர உழவு யந்திரம்.

விற்பனை, பராமரிப்பு, உதிரிப்பாகங்களுக்கு தொடர்பு கொள்க.

யுனைற்றட் டிரக்றேஸ் அண்ட் இக்குப்மென்ற் லிமிட்டெட்
447, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. தொலைபேசி: 95461-2.

MASTERS

திருச்செல்வம் அன் கொம்பனி
108, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நிலமகளை விளைச்சலினுற் பூரிக்கவைக்கும் சக்தி மிகு இரு சக்கர உழவு யந்திரத்தின் செயல் முறைகளை யாழ்ப்பாணக் கல்லூரியில் மார்ச் மாதம் 8-ம் திகதி வரை நடைபெறும் கைத்தொழிற் கண்காட்சியிற் கண்டு களிக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல் வைத்தியம் -6

# பல்சூழ் இழையநோய்

பல்வைத்திய கலாநிதி **பா. சோ. பாரதி**

இந்த நோய் பற்சூத்தை போன்று முக்கி த்துவம் வாய்ந்ததும் அநேகருக்கு விசாரத்தை உண்டுசெய்வது மான நோயாகும் இந்த நோய்க்கு வயது ஒரு தடை யாக இருக்கவேண்டியதில்லை இது திடீரென்று தோன்றுவ தொன்றன்று. பற்சூத்தை யைப் போலப் படிப்படியா கவே பற்களைத் தாக்குகிறது ஆகவே பற்சூத்தையினுற் தாக்கப்படும் பற்களைப்போல இந்த நோயினுல் பாதிக்கப் பட்ட பற்களையும் இழையங் களையும் உரிய காலத்தில் சிறந்த வைத்தியத்தினுல் பாதுகாக்க முடிகிறது இந் நோயின் தன்மைகளையும், தோன்றும் காரணங்களையும் அறியமுன் பல்சூழ் இழையத் தின் முக்கிய பகுதிகளைத் தெரிந்தெடுப்பது நல்லது.

பல்சூழ் இழையத்தின் முக்கிய பகுதிகளாவன:-

1. முரசு-(Gingiva)
2. பல்வேர் சுற்று இழை யம்-(Periodontal Membrane).
3. பற்காரை- (Cementum)-
4. பல்வேரைத் தாங்கும் சுண்ண இழையம்-(Alveolar bone)-என்பு.

முரசைப்பொறுத்தமட்டில் அதன் இயல்பைக்கொண்டு இரண்டு பகுதிகளாகக் கூற லாம். முரசும் பல்லின் கழுத் தும் சந்திக்கும் இடத்திலி ருந்து முரசின் விளிம்புவரை யும் இருப்பது தனிப்பட்ட ஒட்டா முரசாகும் (Free Gingiva). பற்களின வேரைத் தாங்கும் என்பையும் பற்க ளின் காரையையும் மூடியிருப் பது ஒட்டு முரசாகும் (Attached Gingiva) பற்களுக்கிடை யில் இருக்கும் முரசுப்பகுதி முனைவடிவாகவிருக்கும். பல் வேர் சுற்று இழையம் பற் காரையையும் பல்வேரைத் தாங்கும் சுண்ண இழையமா கிய அலகு என்பையும் தொடுத்திருக்கும் பற்காரை பற்களின் வேர்ப்பகுதியை மூடியிருக்கும் ஒரு விசேட இழையமாம். இதன் முக் கிய தொழிலானது பற்களைப் பற்குழிகளில் (Tooth Sockets) இறுக்கமாக வைத்திருப்பதா கும்.

இந்தநோயாற் தாக்கப்படும் இழையங்களைப் பொறுத்தும், தன்மையைப் பொறுத்தும் இந்நோயிற் பல வகைகள் உண்டு. இதில் முக்கியமா னவை:-

(அ) முரசில் ஏற்படும் அழற்சி-(Gingivitis)

(ஆ) பல்வேர் சுற்று இழை யத்தில் ஏற்படும் அழற்சி-(Periodontitis) ஆகும்.

### பல் சூழ் இழைய நோக்கு முக்கிய காரணம் வாயில் ஏற்படும் உணவுத் தேக்கமே

(Food Impaction)

கிருமிகள் பெருக்கமடைவ தற்கு ஏதுவாக இருக்கும் உணவுத் தேக்கமே இந்த நோய் ஆரம்பமாவதற்கு முக் கிய காரணமாகிறது. இது பல வழிகளில் ஏற்படலாம். எந்தெந்தக் காரணங்கள் உணவுத் தேக்கத்தைக் கூட்டு வதற்கு உடந்தையாக இருக் கின்றனவோ அவையெல்லாம் இந்த வருத்தத்தை ஏற்படுத் துவதற்குப் பங்கெடுக்கின்றன. பற்களிலும், பற்களுக்கிடை யில் உள்ள வெளிகளிலும் தங்கும் உணவெச்சங்கள் உமிழ்நீருடன் சேர்ந்து மெதுமையான படிவமாகப் (Soft tartar) பற்களிற்தோற் றுகிறது. இந்தப்படிவம் சுலப மாக நீக்கக்கூடியது. தினமும் சாப்பாட்டிற்குப் பின்பு பல் துலக்குதலே இந்தப்படிவத்தை நீக்கப் போதுமானது. அவ் வாறு பல் துலக்குதலினுல் இந்தப் படிவத்தைத் தினசரி அகற்றுது கவனமற்று இருந் தால் இதில் கிருமிகள் பெருகி உமிழ்நீரிலுள்ள தாதுப் பொருள்களுடனும், இழையங் களிலிருந்துநீக்கப்படும் அணுக் களுடனும் சேர்ந்து இறுக்க மடைந்து சீமெந்து போன்ற தொரு படிவமாக (Calculus) பற்களின் வெளிப்புறத்தில் உண்டாகிறது. இதை இலகு வில் அகற்றிவிடமுடியாது. இதற்கு வைத்திய உதவி தேவை.

இப்படி ஏற்பட்ட படிவங் கள் முரசைக் காயப்படுத்து கின்றது. அரித்தற்தன்மை யாய் உண்டான காயங்களி னூடாக கிருமிகள் முரசைத் தாக்கத் தொடங்கி இந் நோயைப் படிப்படியாகக் கொண்டுவரும். பற்காவிப்படி வங்கள் முதலில் பற்களின் கழுத்தும் முரசும் சந்திக்கும் இடத்தில் தோற்றுகிறது. பின்பு மேலே பற்றலையை நோக்கியும் கீழே ஒட்டுமுரசை நோக்கியும் படியும். ஆகவே இந்த வருத்தத்தை (Attached Gingiva) உண்டுபண்ணும். உணவுத் தேக்கம் உணவு அருந்தியபின்புமுறைப்படி பற் களைத் தூய்மைப்படுத்தாததா லேயே உண்டாகிறது.

### இந்நோய்வர ஏதுவாக இருக்கும் வேறு காரணங்கள்

வேறு காரணங்களால் பல் சூழ் இழையம் பாதிக்கப்படத் தொடங்கியிருந்தாலும் உண வுத் தேக்கத்தால் ஏற்படும் மாற்றம் இந்த நோயை மிகு திப்படுத்த ஏதுவாக இருக்கி றது.

உதாரணமாக-

### (அ) சரியான முறையிற் செய்யப்படாத பல்அடைப்புகள்

பல் அடைப்புகளின் விளிம்பு கள் அழுத்தம் இல்லாது இருந் தாலும் அல்லது அடைப்புகள் நாளடைவில் உடைந்தும் கவ னிக்கப்படாதுஇருத்தலும்,பற் சூத்தை அடைக்கப்படாது இருத்தலும் உணவுத்தேக்கத் தைக் கூட்டி இந்த நோயை ஏற்படுத்தும்.

### (ஆ) சரியான முறையிற் கட்டப்படாத செயற்கைப் பல் கோவைகள்

இதுபற்றிப் பின்னர் விளக் கம் தரப்படும்.

(இ) நல்லமுறையில்செய்யப் பட்ட செயற்கைப்பற்றொகுதி களையும் ஒழுங்கீனமான பல் வரிசையை அழகுபடுத்தப் பாவிக்கும் 'கிளிப்'பையும் துப் புரவாக வைந்திருக்காதுவிடு தல்.

(ஈ) பழுதடைந்த பற்களை பிடுங்குவிக்காது வைத்திருத் தல்.

(உ) பழுதடைந்த பற்களை பிடுங்குவித்ததனுல் ஏற்பட்ட இடைவெளிகளுக்கு செயற் கைப் பற்றொகுதி போடாது விடுதலால் பக்கத்துப் பற்க ளுசகு ஆதாரம்குறைந்து பல் வேர் சூழ் இழையப் பாதிப்பு ஏற்படலாம்.

(ஊ) மேல்வாயில் அரைக் கும் பற்களும் கீழ் வாயில் அரைக்கும் பற்களும் சரியாக இணைந்து பொருந்தி (Balanced Articulation) இருக்காது இணைப்புப் பாதிக்கப்பட்டு (Malocculurion) இருப்பதால் நாளடைவில் பல்வேர் சூழ் இழையப்பாதிப்பு ஏற்பட லாம்.

### இந்நோயின் ஆரம்பம்

முதலில் இந்நோய் முரசு விளிம்பைத் தாக்கத்தொடங்கு கிறது சாதாரணமாக முரசின் விளிம்பிற்கும் பற்களுக்கு மிடையிலுள்ள இயற்கை வெளியான உடற்கூற்றுவெளி (Physiological space) மேற் கூறிய தாக்கத்தாலும், கிருமி கள்வெளிப்படுத்தும் புளிநுரை யம்(Enzymes)நச்சுநீர் (Toxin) முதலியவற்றுலும் பல்வேர் சூழ் இழைய நார்கள் சிறிது சிறிதாகப் பழுதடையத் தொடங்கியதும் நோய்நிதா னத்துக்குரிய வெளியாக (Pathological space) மாற்றம் அடைகிறது. இந்த மாற்றமே இந்நோய் நிலைப்படுத்தற்குரிய காரணமாகிறது.

(தொடரும்)

### வாழ்க்கை

வாழ்க்கை யென்பது ஒரு கடமை,ஒருவேலை, குறிக்கோளுடையது. வாழ்க்கையில் சந்தோ ஷத்தைக் காணவேண் டுமென்ற தத்துவத்தை மட்டும் உங்கள்மகனுர் க்குப்போதிக்காதீர்கள்,

-மாலினி

# சிறுகதை...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

மாதிரித்தான். ஆனபடியால் அனுஷாவின் அண்ணனும் கொழும்பிலிருந்து வந்துவிட் டான். "எங்களுக்கும் அவளுக் கும் மாப்பிள்ளை பிடித்து விட்டபடியால் மாப் பிள்ளை வீட்டார் எவ்வளவு கேட்டாலும் குடுங்கோ... நானும் தம்பியும் மற்ற நாலு பெட்டைகளையும் கவனிப் போம்... அப்பாவுடைய தோட்டவருமானமும் கொஞ் சம் வரும்தானே;" என்ருன் அண்ணு.

"எல்லாம் அப்பா தரகரு டன் மாப்பிளை வீட்டுக்குப் போய்வந்தால் முற்றுத்தெரி யும்" என்ருள்பதட்டத்துடன் அம்மா. நேற்றுக்காலையில் அப்பா மாப்பிளை வீட்டுக்குப் போய்வந்தபோது அம்மாவை விட மகள்தான் அதிக ஆவலா கக் காத்திருந்தாள், அவள் அறைக்குள் இருந்தது அவர் களுக்குத்தெரியாது. மெல்லிய குரலில் அவர்கள் ...விருந்தை யிலிருந்து பேசிக்கொண்டார் கள்.

"பெடியனுக்குத் தகப்ப னில்லை. அவர் ஒரு கடைக் காரன். மூன்று அண்ணன்மார் மூத்தவர் இன்றைக்குப் பின் னேரம் பிள்ளையைப் பார்க்க வருவார். மாப்பிள்ளைக்குஅவர் பார்த்து முடிவெடுத்தால் சரி தான்... அவங்களெல்லாம் ஒருத்தருக்கொருதர் அடங்கிய வங்கள்... மாப்பிளைப்பெடியன் குடும்பத்துக்குக் கட்டுப்பட்ட வன்...மிச்சம் நல்லபிள்ளை யாம்" -அனுஷாவிற்குக் கேட் கக் கேட்க இனிப்பாயிருந்தது மேலும் அப்பாவே தொடர்ந் தார். "தமையன்ம[illegible] எல் லாம் உத்தியோகம். இரண்டு "தம்பிமார்... ஒருதன் படிப் பிக்கிருன். மற்றவன் படிக் கிருன். இரண்டு பெட்டை யள்... [illegible] கடைசியள்... இரண்டும் சிறிசுகள்...' என்று அப்பா சொன்ன அந்த விவ ரங்கள் அம்மாவுக்கு இரசனை யாயிருக்கவில்லை.

'அப்பசரி பரவாயில்லாத இடம்தானே...அதிருக்கட்டும், சம்மந்த விஷயமாக மாப் பிள்ளையின் தாய் என்ன சொன்ன?' என்று அம்மா தான் ஆர்வத்தைக் கொட்டி ஞள்.

'ஓ! நான் போனவுடன் அவதேத்தண்ணி கொண்டு வந்தா. பிறகு கதை ஆரம்ப மாச்சு... உன்னுடைய மாமா வையும் தெரியுமாம். நாங்கள் எல்லாரும் உத்தியோகம் எண்டாலும் சாதிசனத்தில் நல்லனங்களென்றாலும் சாத்திரம் நல்லாகப்பொருந்தி வாறபடியாலும் எங்களு டைய பிள்ளையைத்தான் செய்ய விருப்பப்படுகினம் என் கிறமாதிரித் தெரியுது' என் ருர் அப்பா.

'அதுசரி சாத்திரப் பொருத் தத்தைப் பற்றித் தாய்க்காரி என்னவாம்?" அம்மா ஆவலா கக் கேட்டாள்.

"எங்களுடைய சாத்திரி சொன்னதைத்தான் அந்தச் சாத்திரியும் சொல்லியிருக்கி ருர்' என்ருர் அப்பா...

'அதைத்தான் சொல்லுங் களேன்' அம்மாவுக்கு மறுபடி அதைப்பற்றி அப்பாவின் வாயால் கேட்பதில் பெரிய ஆர்வம்...

'சாத்திரம் 72 வீதம் பொருத்தமாம் ஆணின் சாத் திரத்தில் பாவக் கிரகங்கள் கூடுதலாக இருந்தாலும், பெண்ணின் இராசி ஆணின் இராசியாயிருக்கிறதாலும் யோனிப் பொருத்தம் ரச்சுப் பொருத்தம் தாலிப் பொருத் தம் எல்லலாம் நல்லாயிருக்கிற தாலும் இன்னும் என்னென் னவோ கா[illegible]ங்களாலும் அந்தச் சாத்திரம் நல்ல பொருத்தமாம்... இனி மாப் [illegible]க்கும் முப்பத்[illegible] வயதாய்ப்போச்சு... இன்னும் பிந்தினுல் அவருக்குப் பிற[illegible]

கிற பிள்ளை மழலை பேசத் தொடங்க அவர் அறளை பேசத் தொடங்கச் சரியாகி விடும். இவ்வளவு நாளும் அவ்வளவு சாத்திரம் பொருத் தமாகக் கிடையாததாலை தான் காலத்தைக் கடத்த வேண்டியிருந்ததாக்கும்' என் ருர் அப்பா...

'இந்தக் கல்யாணம் கட்டா யம் பொருந்திவிடும் என்றது தான் என்ரை எண்ணம்' என்ருள் அம்மா...

'அப்பிடிச் சொல்லக் கூடாது...ஒரு காரணமுமில் லாமல் தாலி கட்டப்போகும் போது குழம்பிய கல்யாணங் களும் என்னுடைய அனுப வத்தில் எத்தினையோ கண் டிட்டேன்' என்ருர். இவ் வளவு நேரமும் அவர்கள் பேசுவதை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார். அதைக் கேட்ட அனுஷாவின் இதயத்தில் ஈட்டியேறுவது போலிருந்தது.

'ஏன்? இனியென்ன தடங் கள்...நாங்கள்தான் மாப் பிள்ளை பக்கம் கேட்கிற சீத னத்தைக் குடுக்கத்தயாராயி ருக்கிருேமே' என்ருர் அப்பா.

'அல்லாவிட்டாலும் எங்களு டைய பிள்ளையைப் பார்த்த ஒருதன் அவளை வேண்டாமென்றும் சொல்லு வானே?' என்ருள் அம்மா. அவளே தொடர்ந்து... 'மாப் பிள்ளை பக்கம் இப்ப எவ் வளவு கேட்கினம்?' என்று கேட்டாள்.

'இனும் முப்பதும் சீதனக் காசு இருபதும்...நகையும் வீடு வளவும்தான் அவர்களுடைய குறிப்பு...' என்ருர் அப்பா...

'அதுக்கிடையிலே மானிப் பாயில் ஒரு பெரிய வியாபாரி யின்ரை மகளுக்கும் இந்தச் [illegible] 60 [illegible] பொருந்திவருகுது. சீதனக் காசு [illegible]

இனும் ஐம்பதாயிரமும் குடுக் கத் தகப்பன் தயாராம் என் ருர் தரகர்.

'அவ்வளவுஅளவுக்கு மிஞ்சிச் சீதனம் குடுக்கத் தயார் என் ருல் பெட்டையிலை ஏதோ சூத்தையிருக்கவேணும்!' என்ருள் அம்மா...

'சே...அப்புடிச் சொல்லக் கூடாது...இப்ப எங்களுடைய சமூகத்துக்குள்ளை மாப்பிள்ளை கள் மிச்சம்குறைவு...மாப் பிள்ளைப் பஞ்சமாயிருக்கு' என்று தன் வியாபாரச் சுலோ கத்தை எடுத்துவீசினுர் தரகர். அம்மா அடங்கிவிட்டாள்.

'சே! அந்தப்பிள்ளையைச் செய்ய மாப்பிள்ளையின் தமை யனுக்கு விருப்பமில்லை. அவள் மூல நட்சத்திரகாரியாம்' என்ருர் அப்பா.

'ஆனுல் அதைவிட இன் னெரு சாத்திரம் அங்கே போட்டிபோடுது. திருநெல் வேலியில்தான் பொம்புளை... சாத்திரம் 75 வீதம் பொருத் தம். மானிப்பாய்க்காரர் மாதிரி சீதனமும் கொடுப் பார்கள்' என்ருர் தரகர்.

'சே! அதுகும் நடவாது... அவளுக்கு மாப்பிளையை விட ஒரு வயது கூடவாம். மாப்பிளை அடியோடு வேண் டாம் என்றிட்டாரும்...' எனக்கே வயது போயிற்று... இனிக்கல்யாணம் முடிந்து இரண்டு மூன்று பிள்ளை பிறந் தால் மூத்தபிள்ளை 'மேஜ ரா'க முதல் தலை நரைத்து நடுக்கம் கண்டுவிடும்... பிள்ளையை அதட்டி அடக்கி வளர்க்க உடம்பில் சக்தி இருக்குமோ தெரியாது என்று நான் யோசிக்கிறேன். என்னை விட மூத்தவளுக்கு என்ன கல்யாணம்...ஆணும் பெண் ணும் வயதுபோய்க் கட்டிக் கொண்டால் பிறக்கிற பிள்ளை களும் திடமாயிருக்காது என்றும் சொல்லுகினம்' என்று மாப்பிள்ளை முடிவாய்ச் சொல்லியாச்சாம்' என்ருர் அப்பா.

கேட்டுக்கொண்டிருந்த அனுஷாவுக்குத் தரகரின் பேராசைப் புத்தி நல்லாக விளங்கியது... சீதனம் அதிக மாகிக்கொண்டுபோகிற அளவுக்கு தரகனுக்குத்தானே இலாபம். சீதனத்தொகையின் 4 வீதம் பெண் வீட்டாரும், 4 வீதம் மாப்பிள்ளை வீட்டா ருமாக எட்டு வீதம் தரகுக் கூலி கொடுப்பவர்களே!... தரகனுக்குத் தேவை அதிக தரகுக்கூலி ... மாப்பிள்ளை பெண்ணுக்கு வயதேறுவதும், தலைநரையாவதும், உடல் கெடுவதும்...அதிகமானவர் களுக்குக் கல்யாணமே இல்லா மல் போவதும், பெண்ணைப் பெற்றவர்கள் சீதனம் கொடுத் துச் சாவதும் தரகனுக் கப்பாலான விஷயங்கள். 'விதானை பொலிசைக் கூப் பிட்டு சின்னச்சண்டையைக் கட்சிச் சண்டையாக்குவது போலத்தான் நம்மவர்கள். அவனவளுக்குப் பிடிச்சமாதி ரிக் கல்யாணங்களை, குறைந்த சீதனத்தோடு குறைந்த வய தில் முடித்துவைப்பதற்குப் பதில் சிக்கலாக்கித் தரகனைக் கூப்பிட்டு இருபதாம் வயதில் இருபதாயிரத்தோடு முடிய வேண்டிய கல்யாணங்களை நாற்பது வயதில் இரண்டி லட்சம் கொடுத்துச் செய்கி ருர்கள்...பருவத்தே பயிர் செய் என்ற மாதிரி இளம் வயதில் நடக்கவேண்டிய கல்யாணத்தை நாயாகக் குலைக்கும் நாற்பதாவது வய தில் செய்துவைத்தால் சீரற்ற குடும்ப வாழ்வும்...சீரற்ற சமூக வாழ்வும் வருவதைத் தடுக்க முடியாது' என்று போன வாரம் மகளிர் சங்கக் கூட்டத்தில் ஒரு பெண் பேசி யது அனுஷாவுக்கு நினைவு வந்தது.

"அதை விட்டாலும் இன் னெரு கோண்டாவில் பெண் ணும் பொருந்தி வருகுதாம்... ஆனுல்..." என்ருர் தரகர்.

"அவள் உத்தியோகக்காறி. உத்தியோகத்தை விடமாட் டாளாம்..." என்ருர் அப்பா.. பின்னர் "இது முடிஞ்சால்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கிரிக்கட் துளிகள்

கடந்த 32 ஆண்டுகளாக பாகிஸ்தானிய கிரிக்கட் குழுவில் முகமது சகோதரர்களில் யாராவது ஒருவர் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றார்கள். வஸீர் முகமது, ஹனிப் முகமது, முஷ்டாக் முகமது அண்மையில் இந்தியா வந்த அணியில் சாதிக் முகமது இடம்பெற்றிருக்கிறார்.

தான் விளையாடிய முதல் டெஸ்டின் முதல் பந்திலேயே முதலாவது விக்கட்டைப் பெற்ற அதிர்ஷ்டசாலி பாகிஸ்தானிய ஆட்டக்காரரான இன்டிகாப் ஆலம்.

பாகிஸ்தான் ஆட்டக்காரரான ஹனிப் முகமது, மேற்கிந்திய அணிக்கு எதிராக 337 ஓட்டங்களை அடிக்க எடுத்துக்கொண்ட நேரம் 16 மணி 10 நிமிடம். இந்த டெஸ்டைப் பொறுத்தவரை பீல்டிங் செய்ததையும் சேர்த்தால் 5 நாட்களும் இவர் மைதானத்திலேயெ நின்று ஒரு சாதனையை ஏற்படுத்தியிருக்கிறார்.

நத்தை வேகத்தில் 500 நிமிடங்களில் ஒரு செஞ்சரி (100 ரன்கள்) போட்டு உலக சாதனை ஏற்படுத்தியபெருமை பாகிஸ்தான் வீரர் முதாசர் நாஸரைச் சேரும்.

இந்திய அணியின்விக்கட்கீப்பரானகிர்மாணிடெஸ்ட்களில் 52 ஸ்டம்பிங்செய்து டபிள்யூ. ஏ. ஓல்ட் பீல்டின் சாதனையை முறியடித்திருக்கிறார், இதுவரை கிர்மானி 58 ஸ்டம்பிங் செய்திருக்கிறார்.

இந்தியா - பாகிஸ்தானுக்கு இடையே 1954-55, 1960-61 ஆகிய ஆண்டுகளில் நடந்த பத்து டெஸ்ட்களில் எவருக்குமே வெற்றிகிடைக்கவில்லை.

பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா 1960-ம் ஆண்டு 539 ஓட்டங்களை எடுத்து டிக்ளேர் செய்தது, பாகிஸ்தான் 1978-ம் ஆண்டு 539 ஓட்டங்களை எடுத்து டிக்ளேர் செய்தது. இரண்டு அணிகளைப் பொறுத்தவரையிலும் ஒருவருக்கொருவர் எதிராக அடித்த அதிக ஓட்டங்கள்இதுவாகும்,

ஒரே இன்னிங்ஸில் ஏழு காட்சுக்களைப் பிடித்து சாதனைபுரிந்தவர் பாகிஸ்தான் விக்கட் கீப்பரான வஸிம் பாரி.

1952-ம் ஆண்டு ஒரே இன்னிங்ஸில் எட்டு விக்கட்டுகளைக் கைப்பற்றி சாதனை புரிந்த இந்திய வீரர் வினு மன்காட். இதே போல் சென்ற டிசம்பர் மாதம் டெல்லியில் நடந்த இரண்டாவது டெஸ்டில் பாக். வீரர் சிக்கந்தர் பக்த் எட்டு விக்கட்டுகளை எடுத்துச் சாதனைபுரிந்திருக்கிறார்.

டெஸ்ட் பந்தயங்களில் மட்டும் கவாஸ்கர் 5500 ரன்கள் எடுத்து முடித்தார். ஒரே டெஸ்டில் இரண்டு இன்னிங்ஸ் களிலும் நூறு ரன்கள்-இந்த சாதனையை மூன்றுவதுமுறையாகச்செய்துமுடித்தவர்இவர். உலகில் இதுவரை வேறு எந்த ஆட்டக்காரரும் இந்த சாதனையைச் செய்ததில்லை.

கபில்தேவ் ஒரு வருடத்தில் 72 விக்கட்டுகள் எடுத்து ஒரு புது உலக சாதனையை ஏற்படுத்தினர்.

100 விக்கட்டுகளையும் 1000 ரன்களையும் டெஸ்ட் பந்தயங்களில் கபில்தேவ் பெற்றுக்கொண்டார்.

பாகிஸ்தானைச் சேர்ந்த அஸிப் இக்பால்- மஜீத்கான். வஸிம் பாரி,ஸஹீர் அப்பாஸ், இம்ரான் கான்' தலத் மிஸ்ரா இந்த ஆறு ஆட்டக்காரர்களும் பாகிஸ்தான் இன்டர் நேஷனல் ஏர்லைன்ஸில் பணிபுரிகிறார்கள்.

சாதிக் முகமது, மியான் டாட், வஸிம் ராஜா, சிக்கந்தர் பக்த், அப்துல் ரகீம், அப்துல் காதர் எத்ஷாமுதீ

இந்த ஏழுஆட்டக்காரர்களும் வங்கியில் பணியாற்றுகிறார்கள்.

தொகுப்பு:
இ. நவரத்தினராசா
புசத்தனைத்தோட்டம்,
கம்பளை.

# இந்திய தேசிய உணர்வுக்கு வித்திட்ட வங்க இலக்கியம்

**இந்திய சுதந்திரத்திற்காக தேசிய உணர்வினை ஏற்படுத்துவதில் வங்காள தேசத்து இலக்கிய கர்த்தாக்கள் அளித்த பாரிய பங்கினை இக்கட்டுரை விளக்குகின்றது.**

த. நா. சேனாபதி

1857-ல் நடந்த சிப்பாய்களின் கிளர்ச்சியைப் பிரிட்டிஷாருக்கு எதிரான தேசிய எழுச்சி என்று வைத்துக்கொண்டாலும், அதற்கு ஒரு முக்கிய காரணம் ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பனியின் ஓர் உத்தரவேயாகும். துப்பாக்கிரவைகளுக்கு இந்துச் சிப்பாய்கள் மாட்டுக் கொழுப்பையும், முஸ்லீம் சிப்பாய்கள் பன்றிக் கொழுப்பையும் தடவவேண்டுமென்று பொருள்படுவது அது. இதனால் அவரவர் மத உணர்வு பாதிக்கப்பட்டுக் கம்பனியின் படையில் இருந்த இந்து-முஸ்லீம் சிப்பாய்கள் வெகுண்டு எழுந்தார்கள். அதோடு அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த டல்ஹவ்ஸி பிரபு, 'வாரிசு இல்லாமல் இறக்கும் சுதேச மன்னர்களின் ராஜ்யம் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்டுவிடும்; அந்தச் சுதேச மன்னர்கள் தத்து எடுத்துக்கொண்டாலும் செல்லாது' என்ற கொள்கையைக் கடைப்பிடித்ததும் ஒரு காரணமாக அமைந்தது. சுதேச மன்னர்கள் சிலரும் நாஞசாகிப் போன்ற பேஸ்வாக்களும், பாதுர்ஷா என்ற கடைசி மொகலாய மன்னரும்தாம் இந்தக் கிளர்ச்சியில் பங்குகொண்டார்கள். பொதுமக்களைப் பொறுத்த வரையில் எவரும் மொத்தமாக இதில் ஈடுபட்டதாகச் சொல்வதற்கில்லை, ஏன், பஞ்சாப், வங்காளம், தென்னாடு இந்த எல்லையில் அந்தக் கிளர்ச்சி பரவவேயில்லை.

### விடுதலை உணர்வு

இந்தியப் பொதுமக்களிடையே அந்நிய ஆதிக்கத்தை எதிர்க்கவேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது முதன் முதலில் வங்காளத்திலேதான். 1775-ல் தன்னலமற்ற துறவிகள் சிலர் அப்போது ஏற்பட்ட பஞ்சத்தில் மக்கள் மடிவதைக் காணப்பொறுமல், ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து, அந்தக் கம்பெனி அதிகாரிகள் பதுக்கிவைத்த தானியம், வரிப்பணம் முதலியவற்றைக் கொள்ளையடித்து பொதுமக்களுக்கு வழங்கினார்கள். ஆங்கில ஆட்சி ஆட்டங்கண்டது; ஆனல், நீடித்து இந்தத் துறவிகள் செயல்படாததால், இவர்களுக்குக் கிடைத்த வெற்றி பயனற்றுவிட்டது. 'சந்நியாசிக் கலகம்' என்று ஆங்கிலேயர் குறிப்பிட்ட இதைத்தான் பக்கிங் சந்திரர் என்ற பிரபல வங்க நாவலாசிரியர், 1870 வாக்கில் 'ஆனந்த மடம்' என்ற பெயரில் எழுதினர். அவரே அந்த நாவலில் தாம் எழுதியிருந்த 'வந்தே மாதர'ப் பாடல் பிற்காலத்தில் தேசிய உணர்வை ஊட்டி, இந்திய மக்களைப் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக எழச்செய்யும் என்று எண்ணியிருந்தார். பிரிட்டிஷ் ஆட்சியில் டெபுடி மாஜிஸ்டிரேட்டாகப் பதவி வகித்தவர் அவர்; துர்க்கையைத் தேசத் தாயாகப் பாவித்துப்போற்றியிருந்தார்.

### நாடக விருந்தில் ..

ஆனல், அவருக்கும் முன்னர் வங்காளத்தில் நடந்த ஒரு சம்பவம் பொதுமக்களின் தேசிய உணர்வைத் தூண்டிவிட்டது என்பதைக் குறிப்பிட்டாகவேண்டும். தீனபந்து மித்திரர் என்பவர், அப்போது நீலித்தோட்ட முதலாளிகளாக இருந்த வெள்ளைத் துரைமார், தம்கீழ் வேலை செய்யும் இந்தியக் 'கூலிகளை'-ஏழைமக்களை-ஈவிரக்கம் பாராமல் துன்புறுத்திவந்ததை 'நீல தர்ப்பன்' அல்லது 'நீலிக் கண்ணாடி' என்ற நாடகமாக வங்காளியில் எழுதியிருந்தார். அதை அந்தக் காலத்துப் பிரபல வங்க நடிகர்கள் கல்கத்தாவிலும் மற்ற ஊர்களிலும் நடித்துப் பொதுமக்களிடையே விழிப்பை உண்டுபண்ணிவிட்டார்கள். அந்த நாடகம் எவ்வளவு உருக்கமாக இருந்தது என்பதற்குப் பின்வரும் நிகழ்ச்சியே சான்றாகும். கொடுமைபுரியும் வெள்ளை முதலாளியாக நடித்தவர் கிரீச கோஷ் என்ற பிரபல வங்க நடிகர். நாடகத்தைப் பார்க்க வந்த பிரமுகர்களுள் ஈசுவர சந்திர வித்தியாசாகரர் என்ற பேரறிஞரும் ஒருவர்; எளிய மக்களிடம் இரக்கம்கொண்ட உதவும் வள்ளல்; அவ்வெள்ளைத்துரை வேடத்தில் கிரீச சந்திரர் இந்தியக்கூலி ஒருவனை உதைத்துக் கீழே தள்ளி நசுக்குகிற அவலக் காட்சி அனைவரையும் உலுக்கிவிட்டது. வித்தியாசாகரர் கொதித்து எழுந்து, 'நிறுத்தடா' என்று கூறி, அந்த நடிகரின் மேல் தம்செருப்பை எடுத்து வீசினாராம்; பொதுமக்கள் திகைத்துவிட்டார்கள். சட்டென்று நடிப்பதை நிறுத்திவிட்டுக் கிரீச சந்திரர் அந்தச் செருப்பைத் தம் தலைமேல் வைத்துக்கொண்டு, 'மகாஞன ஈசுவர சந்திரர் என் நடிப்புக்குத் தந்த வெகுமதியாகவே இதை ஏற்றுக்கொள்கிறேன்' என்றதும், சபையில் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம். வித்தியாசாகரரும் தம் பழைய நிலைக்கு வந்து புன்சிரிப்புடன் அந்த நடிகரை மனப்பூர்வமாக வாழ்த்தினாராம்!

ஆங்கில அரசுக்கு இதனால் பீதி கண்டுவிட்டது. அதே சமயம் ஏழை இந்தியரிடம் இரக்கமுள்ள ரெவரண்ட் லாங் என்ற ஆங்கிலப் பாதிரியார் 'இண்டிகோ மிர்ரர்' என்று இந்த நாடகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இதனால் நீலித்தோட்ட முதலாளிகளின் கொடுமையைச் சாதாரண ஆங்கில மக்கள் அறிய நேர்ந்தது. வங்க (பிரிட்டிஷ்) சர்க்கார் அவரைக் கைது செய்து, மூல நாடகம் மொழிபெயர்ப்பு இரண்டையுமே தடைசெய்து, பறிமுதல் செய்துவிட்டது. அதுவரை ஆங்கில மோகங்கொண்டு மேனாட்டுப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி. வந்த வங்காளிப் பிரமுகர்களுக்கு அப்போதுதான் ஞானோதயமாயிற்று. மத்திய (பிரிட்டிஷ்) அரசுக்கும், பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கத்தினருக்கும் இதுபற்றித் தெரிவித்து, நீலித்தோட்டத் தொழிலாளிகளின் நலனுக்காக வாதாடினார்கள். விரைவில் பலன் கிடைத்தது. மத்திய அரசு தோட்டத் தொழிலாளிகளின் குறைகளை நீக்க முன்வந்தது. தோட்டமுதலாளிகளின் கொட்டமும் அடங்கியது. அவர்கள், தொழிலாளர்களை மனிதர்களாக மதித்து நடத்தவேண்டியதாயிற்று. லாங் பாதிரியாரும் விடுதலையானார். பொதுமக்களின் இந்தக் கிளர்ச்சி வெற்றி கண்டதும் தேசிய உணர்வு மேலோங்கத் தொடங்கியது.

1885 வாக்கில் தோன்றிய இந்தியத் தேசியக் காங்கிரஸ் இயக்கம் ஆரம்பத்தில் 'ராஜ விசுவாசம்' தெரிவித்துச் சட்ட ரீதியான முறையில் கிளர்ச்சி செய்துவந்தது. ஆனல் வங்காளத்தை 1904 வாக்கில் வைஸ்ராய் கர்ஸன் பிரபு இரண்டாகப் பிரிக்க உத்தரவிட்டதும், வங்காளத்தில் மட்டுமின்றி இந்தியா முழுவதுமே அதை எதிர்த்துப் பலத்த கிளர்ச்சி மூண்டது. ஆங்கில ஆதிக்கத்தையே ஒழித்துக்கட்டவேண்டும் என்ற உணர்வு ஓங்கியது. முதலில் சுரேந்திரநாத் பானர்ஜி என்ற மாபெரும் வங்கப் பிரமுகர் இதில் ஈடுபட்டாலும், பின்னல் விபின் சந்திரபால், அரவிந்தகோஷ் இருவரும் இதற்குத் தலைமை வகித்தார்கள். அப்போதுதான் பங்கிம் சந்திரருடைய 'வந்தே மாதர'ப் பாடல் நம் முதல் தேசிய கீதமாக ஏற்கப்பட்டது. பரோடா சமஸ்தானத்தில் உயர் பதவியிலிருந்த அரவிந்தர், அந்தப் பதவியைத் துறந்து, வங்கப்பிரிவினையை எதிர்க்கும் கிளர்ச்சியில் மும்முரமாக ஈடுபட்டார். விபின் சந்திரர் தொடங்கிய 'வந்தே மாதரம்' என்ற பத்திரிகையில் ஆங்கில அரசின் போக்கைக் கண்டித்துக் காரசாரமான கட்டுரைகளை அரவிந்தர் எழுதலானார். பல மாணவர்கள் ரகசியப் புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டுத் தம் உயிரையும் பலியிடத் துணிந்ததற்கு இது ஊக்கமளித்தது. அதேசமயம் அரவிந்தர் செய்த ஒரு சொற்பொழிவு, ராஜத்துவேஷத்தை உண்டுபண்ணக்கூடியது என்று அவரைக் கைதுசெய்தார்கள். அலிபுர்ச் சிறையில் அவரை அடைத்தார்கள். பலாத்காரத்தைத் தூண்டியிருக்கிறார் என்பது அரசினரின் வாதம். விசாரணையின்போது பாரிஸ்டரும், பின்னளில் 'தேசபந்து' என்று மக்கள் போற்றியவருமான சி. ஆர். தாஸ், அரவிந்தரின் சார்பில் வாதாடி அரசின் குற்றச்சாட்டை முறியடித்து வெற்றி கண்டார். அரவிந்தர் விடுதலையானார். புதுவையில் குடியேறியபின், ஆத்மசாதனையில் ஈடுபட்டுவிட்டார். அப்படியும் பிரிட்டிஷாருக்கு அவரிடம் சந்தேகமே. வங்கப்பிரிவினையின் போது, ஆரம்பத்தில் உற்சாகத்துடன் அதில் ஈடுபட்டவர் மகாகவி ரவீந்திரர். இன்று பாரதநாட்டின் தேசிய கீதமாக விளங்கும் 'ஜனகணமன அதிநாயக' என்பது 1910 வாக்கில் அவர் எழுதிய நாட்டுப்பாடலாகும். ஆனல் 'சீமைத்துணியைக் கொளுத்தும் இயக்கம்'காரணமாக எங்கும் பலாத்காரம் ஓங்கும் என்று முன்பே அவர் எச்சரித்தும், யாரும் அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. இந்த இயக்கம் பலாத்காரத்திற்கு வித்திட்டது. ஆங்கில சர்க்கார் கடுமையான அடக்குமுறையில் ஈடுபட்டார்கள். இளம் வாலிபர்களைக் கைதுசெய்து சித்திரவதை செய்யலானார்கள். இதைக் காணச் சகியாமல் ரவீந்திரர் போலித்தேசியவாதிகளின் போக்கைக் கண்டித்தார். அப்போது அவர் எழுதிய நாவல்தான் 'வீடும் வெளியும்' என்பது. குறுகிய மனப்பான்மை கொண்ட போலித் தேசபக்தன் ஒருவனுடைய வாழ்வையும், அமைதியான ஆக்கவழியில் பற்றுள்ள அவனுடைய நண்பனை மிராசுதாரையும் முக்கிய பாத்திரங்களாகக்கொண்டது அது. போலித் தேசபக்தன் ஒருவன் கள்ளங்கபடமற்ற ஒரு வாலிபனை ஊக்கிவிட்டு, பொலிஸ் துப்பாக்கிக் குண்டுக்கு அவனை இரையாக்குவதை ரவீந்திரர் விபரிக்கும்போது, கல்நெஞ்சமும் கரையும். அதோடு இந்து-முஸ்லிம் சமரசத்தை விரும்பிய அவருடைய போக்கும் அதில் புலனாகிறது. கிழக்கு வங்காளத்து மிராசுதார்கள் பெரும்பாலோர் அப்போது இந்துக்கள். அவர்களுடைய பண்ணைகளில் வேலை செய்து வரும் பொதுமக்களோ பெரும்பாலும் ஏழை முஸ்லீம்கள். அந்நியத் துணிமறியல் காரணமாக, விற்பனையாகாமல் கிடந்த சீமைத் துணிகளை ஏழை முஸ்லீம் குறைந்த விலைக்குக் கிடைத்த காரணத்தால் வாங்கிச் செல்லும்போது, அவற்றைப் போலித் தேசபக்தர்கூட்டம் பிடுங்கி நெருப்பில்போடும் காட்சியை அவர் வர்ணிக்கும்போது துவேஷமனப்பான்மையுடன் கட்டுப்பாடற்றமுறையில் நடக்கும் இயக்கம் வெற்றி பெறாது என்ற உண்மை புலனாகிறது

### உலக சகோதரத்துவம்

சில நாட்கள்வரை ரவீந்திரரை இந்தப் போலித் தேசபக்தர்கள் இகழ்ந்து வந்தார்கள். அவருடைய தேசிய கீதத்தில் வரும் 'ஜயராஜேசுவர' என்ற தொடரைப் பிரிட்டிஷ் சக்கரவர்த்தி ஆறும் ஜார்ஜின் மீது பாடிய 'முகஸ்துதி' என்றுகூடச் சொல்லி அவருடைய பெயருக்கு இழுக்கு விளைவிக்கப் பார்த்தார்கள். ஆனல் அவர்களது முயற்சி பயன் அளிக்கவில்லை. 1913-ம் வாக்கில் ரவீந்திரர் நோபெல் பரிசுபெற்றபின் உலகம் முழுவதும் அவருடைய புகழ் பரவியது, இந்தியப் பண்பாட்டின் தூதராக அவர் மேனாடுகளில் போற்றப்பட்டார். காந்தியடிகளை 'மகாத்மா' என்று போற்றிய அவர், தமக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் கொடுத்த 'ஸர்' பட்டத்தை ஜாலியன்வாலா பாக்கில் 1919-ல் ஜெனரல் டையர் செய்த படுகொலையின்போது துறந்தார். அச்சமயம் அவர் பிரிட்டிஷ் மன்னருக்கு எழுதிய கடிதம் இந்திய வரலாற்றிலேயே சிறந்தது. மகாத்மா காந்தி அவரைக் குருதேவர் என்று பக்தியுடன் அழைக்கலானார். சத்தியாக்கிரகமுறையையும் ஆக்கத் திட்டங்களையும் ஆதரித்து, அவ்வப்போது கட்டுரைகளும், கவிதைகளும் எழுதிவந்தார் மகாகவி. 'கோரா' என்ற அவருடைய நாவலில், 1857-ல் சிப்பாய்களுக்கு அஞ்சி ஓடிய ஒரு வெள்ளைக்காரப் படைத்தலைவனும் அவன் மனைவியும் வங்காளி அதிகாரி ஒருவரின் வீட்டில் அடைக்கலம் புகுந்தபோது நடந்த நிகழ்ச்சிபற்றி உருக்கமாக எழுதியிருக்கிறார். அந்தப் படைத்தலைவன் தன் மனைவி அப்போது பிரசவித்து இறந்துபோய்விடுவதால், தன் ஆண்குழந்தையை அங்கேயே விட்டுச்செல்ல நேருகிறது வங்காளி அதிகாரியும் அவருடைய மனைவியும் அக்குழந்தையைத்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உளவியல் கட்டுரை

# கல்யாணம் கசக்கிறதா?

(உங்கள் குடும்ப வாழ்க்கையை இன்பகரமாகவும் அமைதியாகவும் நடத்த விரும்புகிறீர்களா? கட்டுரையாளரின் யோசனையைக் கேளுங்கள்:)

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்று சொல்லுவார்கள். ஆனால் இன்றைய எமது சமுதாயத்தில் நாம் காணுகின்ற பெரும்பான்மையான குடும்பங்கள், திருமணங்கள் நரகத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்றே எம்மை நம்பவைக்க முனைகின்றன.

'வெளியே இருப்பவர்கள் உள்ளே போக முயற்சிக்கிறார்கள். உள்ளே இருப்பவர்களோ வெளியேற முயற்சிக்கிறார்கள்' என்று திருமணத்தைப்பற்றி ஒரு நொடிகூட வழக்கில் வந்துவிட்டது. திருமணம் நடைபெறுகிற அன்று 'மலரும் மணமும் போல் வாழ வேண்டும்', 'பதினாறும்பெற்று பெரு வாழ்வு வாழவேண்டும்' என்று எத்தனையோ வகையான வாழ்த்துரைகள் இடம் பெறும்.

'அன்பும் அறனும் உடைத்
தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'

என்று அச்சடிக்கப்பட்ட திருமண உபசாரப் பைகள் பளிச்சென்று எல்லோருடைய கைகளிலும் பவனிவரும். இரண்டு வருடங்கள் சென்ற பிறகு... 'அன்பு' என்பதும் 'அறன் என்பதும் எல்லாம் போய்... 'நரகம்' என்பதும் 'தொல்லை' என்பதுமே நினைவில் வந்து நிற்கும்.

டாக்டர் மு. வ. கூட ஒரு நாவலில்,

'வாழ்க்கை ஒரு போராட்டம். ஓயாத போராட்டம் அலைமிகுந்த கடல். கரையில் இருக்கும் வரை வேடிக்கை பார்த்து மகிழலாம். உள்ளே குதித்துவிட்டால் போதும். அப்புறம் ஓயாத தொல்லை தான். நாமாகவே உள்ளே குதிக்காவிட்டாலும்கூட எல்லாரும் சேர்ந்து எம்மைப் பிடித்துத் தள்ளுகிறார்களே' என்று குறிப்பிடுகிறார்.

'காதல் ஒருவனைக் கைப்பிடித்தே அவன் காரியம் யாவினும் கைகொடுத்தே...' என்று பாரதி பாடிவைத்துவிட்டுப்போக... 'கைப்பிடித்த காதலனைக் கைவிடுவது எப்படி?' என்று எமது பெண்கள் யோசிக்கும் நிலை ஏன் உருவாகியுள்ளது? மேலைநாடுகளுக்கு மட்டுமே சொந்தமாக இருந்த விவாகரத்துக்கள் எமது சமுதாயத்தில் வேகமாகப் பரவிவரும் காரணம் என்ன? இந்த நிலையைத் தடுத்து நிறுத்த முடியாதா?

## முடியும்!

முடியும். நிச்சயமாக முடியும். கசந்து வரும் வாழ்க்கையை இனிமையாக்குவதற்கு இங்கே சில வழிவகைகள் கொடுக்கப்படுகின்றன.

## மனத்திடம்

உங்கள் திருமணம் வெற்றிகரமாக அமையுமென்றும், எக்காரணம் கொண்டும் நீங்கள் உங்கள் கணவரையோ மனைவியையோ பிரிந்து வாழமாட்டீர்கள் என்றும் நிச்சயமாய் நம்புங்கள். உங்கள் வாழ்க்கையை மேலும் இனிமையாக்குவதற்கு நீங்கள் உங்களால் முடிந்த முயற்சிகளை எல்லாம் மேற்கொள்ளப் போவதாக ஒரு திடமான தீர்மானத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு தீர்மானத்தை எடுத்துக்கொண்டு அத்துடன் தொடர்ந்து ஒட்டிக்கொள்வதினால் ஏற்படும் ஒருவகை வலிமையைப் பற்றி இப்போது உளவியலாளர்கள் அதிகம் குறிப்பிடுகிறார்கள்.

'இவளுடன் அல்லது இவனுடன் ஒத்துவராவிட்டால் விவாகரத்து எடுத்துக்கொள்ளத்தானே' என்பது போன்ற ஓர் எண்ணத்தை ஒருபோதும் மனதில் வளர்த்துக்கொள்ளாதீர்கள். என்ன நடந்தாலும் சரி வாழ்க்கை முழுவதற்கும் இவன்தான் இவள்தான் துணை என்று சந்தேகமற்று நம்புங்கள்.

## கலந்துரையாடல்

ஒருவனுடன் மற்றவர் தொடர்புகொள்வதில் எந்த விதமான பிரச்னையுமில்லாத குடும்பங்களில் கசப்பு ஏற்படுவது மிகக்கடினம். ஒரே இடத்தில் சேர்ந்து வாழும் குடும்பங்கள், ஒவ்வொரு நாளும் இரவுச் சாப்பாட்டிற்குப் பின்னர் அன்றைய வீட்டுப் பிரச்னைகளையும் அலுவலகப் பிரச்னைகளையும் கலந்துரையாடவென ஒரு பணி நேரத்தை ஒதுக்கிக்கொள்வது மிகவும் பயனுள்ளதாகும். இந்த நேரங்களில் மனதில் உள்ள பிரச்னைகளை ஒளிவுமறைவின்றிச் சொல்லிக் கொள்வது எவ்வளவு முக்கியமோ அதேயளவு முக்கியமானது மற்றவரது எண்ணங்களை அக்கறையுடனும் ஆர்வத்துடனும் கேட்பதுமாகும். கணவனும் மனைவியும் தொழில் காரணமாக வெவ்

### கோகிலா மகேந்திரன்

வேறு இடங்களில் வாழ்ந்து வாரத்தில் ஒரு முறையோ, மாதத்தில் ஒரு முறையோ சந்தித்துக் கொள்ளுவதானால்... இதுபோன்ற கலந்துரையாடல்களை, இரண்டு மூன்று நாளுக்கு ஒருமுறை எழுதப்படும் விரிவான கடிதங்களில் பரிமாறிக்கொள்வது மிகவும் அவசியமாகும்.

## புண்படும் சந்தர்ப்பங்களைக் கவனித்தல்

எப்போதோ ஒரு நாள்... ஒரு விடயத்தில் கணவனுக்கும் மனைவிக்கும் மனவேற்றுமை தோன்றுவது மிக இயல்பானதுதான். எப்போதும் 'நான் பேச நினைப்பதையே நீ பேசவேண்டும்' என்று சொல்வது, காதல் மயக்கத்தில் வரக்கூடிய வெறுங் கற்பனையே. ஆனால்... அவ்வாறு மனவேற்றுமை வருகின்ற நேரங்கள், அநுபவங்களாக மாறி பின்னால் வரப்போகும் வாழ்க்கைக்குஉதவி செய்யவேண்டும். அன்று 'நான் கூறிய இந்த வார்த்தை' அல்லது 'நான் செய்த இந்தச் செயல்' தான் அவரை அல்லது அவளைப் புண்படவோ, கோபப்படவோ வைத்தது என்பதை நன்றாகக் கவனித்து அதேசெயலை, அதே சொல்லை மீண்டும் பிரயோகிக்காமல்இருக்கும் திறமை கணவனுக்கும் மனைவிக்கும் வந்துவிடுமாயின் இல்லறம் இனியபூஞ் சோலையாய் மணம் வீசவே செய்யும்.

ஒரு மனைவியை அவள் கணவன் சாதாரணமாய் அன்பு காட்டி அரவணைப்பதில்லை. ஆனால் அவள் நோயுற்றிருக்கும் சமயங்களில் மாத்திரம்மிகுந்த அன்பும் அக்கறையும் காட்டுவான். நோயுற்றகாலத்தில் தனக்குக்கிடைக்கின்ற அன்பை எப்போதும் எதிர் பார்த்த அந்த மனைவி, சிலகாலத்தில் அவளை அறியாமலே நிரந்தர நோயாளியாகி விட்டாள். அவர்களுடன் கலந்துரையாடிய உளவியல் நிபுணர் ஒருவர் அந்த மனைவியை நிரந்தரநோயாளியாக்கியது அவன் தான் என்று கூறினார். தனது கவலையீனம் தன் மனைவியை எவ்வளவு உளப் பாதிப்புக்கு ஆளாக்கியிருக்கிறது என்பதை அந்தக் கணவன் கவனித்து வந்திருந்தால் இந்த நிலையைச் சீர்செய்திருக்கலாம்.

## தனித்தன்மை பேணப்படுதல்

எமது இலக்கியங்கள் காதலுக்குத் தந்த அதீத கற்பனையில் 'ஈருடலும் ஒருயிருமாக வாழவேண்டும்' என்றும் உளத்தளவில் அர்த்த நாரீஸ்வர வடிவம் பெற்றுவிடவேண்டும் என்றும், எதிர்பார்த்து... அந்த எதிர்பார்ப்புக்கள் உடைந்து சிதறிப்போய் விரக்தியடைந்த குடும்பங்கள் பல. ஒருவருடைய செயல்கள் எல்லாவற்றிலும் அளவுக்கதிகமாகத் தலையை நுழைத்துக்கொண்டு இரண்டு அரை மனிதர்களாய் வாழ முயன்றவர்கள் எப்போதுமே வெற்றி பெற்றதில்லை. மாறாக ஒருவரை ஒருவர் புரிந்துகொண்ட இரண்டு தனி மனிதர்களாய் வாழ்பவர்களே நல்ல குடும்பங்களை உருவாக்குகிறார்கள்.

சங்கீதத்தில் நாட்டம் என்றால். இருவருக்கும் நாட்டம் இருக்கவேண்டும் அல்லது ஒருவருடைய நாட்டம் நசுக்கப்படவேண்டும் என்று நினைத்தவர்கள் நிம்மதியாய் இருந்ததில்லை.

இருவருக்கும் வெவ்வேறு நாட்டங்கள் இருக்கலாம். அவர்கள் அவற்றிற்காக ஒவ்வொரு நாளும் சில மணித்தியாலங்களைச் செலவு செய்யலாம். மாலையில் கணவரை 'டெனிஸ்'க்குப் போகவிட்டு வாசிப்பதில் ஆர்வமுள்ள ஒரு மனைவி தான் விரும்பியவற்றை வாசிப்பதற்காக உட்காரலாம்.

மனைவிகணவனை டெனிஸுக்குப் போகவேண்டாம் என்று தடுப்பதோ, கணவன் மனைவியை 'என்ன நெடுக வாசிக்கிறாய்?' என்று சினப்பதோ நன்மையைத் தராது. இருவரும் சேர்ந்திருக்கிற நேரம் குறையும்போதுஅதன்இனிமை கூடும்.

## முதன்மை உணர்வு

யாரோஒருவருக்கு மற்றைய எல்லாரையும் விடத்தானே முதன்மையாக இருக்கவேண்டும். தன்னிடமே அவர் எல்லாரையும்விட அதிக அன்பும் அக்கறையும்காட்டவேண்டும், அவருடைய தேவைகளுக்குத் தானே தேவைப்படவேண்டும் என்பவை போன்ற எண்ணங்கள் ஒருமனிதனின் அடிப்படை உளத்தேவைகளாகும். இத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் இல்லறத்தை நடத்திச் செல்வது இருவரதும் கடமையாகும்.

மேற் கூறப்பட்ட வழி வகைகள் யாவற்றையும் முழு மனதுடன் கடைப்பிடித்துவந்தால் நிச்சயமாய் கல்யாணம் கசக்காது. 'இன்னும் பல யுகங்களுக்கு நாங்கள் கணவனும் மனைவியுமாய்ச் சேர்ந்து வாழவேண்டும்' என்ற விருப்பம் தானாக உண்டாகும்.

ஆதாரம்:
உளவியலறிஞர்
டானியல் சுகர்மன்

---

## மிஞ்சியதெல்லாம் எனக்கு உன் கஞ்சி தானோ?

அருணகிரிக்கு அடி யெடுத்துக்
கொடுத்து அகிலமெலாம்
அதிரப்பாட வைத்தாய்;
கருணையுளம் படைத்த வுனக்கு
இந்தப் பாவிக் கெலாம்
இரண்டொரு கவிதை புனைய
அடுக்கவில்லையோ மனம்?

★

அதிவேகமாய்ச் சுழலுமிவ் வுலகு
அமைதி தர மறுக்கையில்
கதிர் வேலவனை உன்னிடம்
கதியேது எனக் கேட்கையில்
புதிர் வீசும் புன்னகையுடன்
பதிலேதும் பேசாது நீ
பதுமையானதும் ஏனோ?

★

மனைவி, மக்கள், சுற்றம்
சூழவுள்ள சமுதாயம்;
வினையும் விதியும், வல்ல
பல விஞ்ஞானமும்
நினைவும் கனவும், நீண்ட
நெடும் பெருமூச்சும்;
நித்திய துயிலோ உனக்கு?

★

கண்ணதாசன் உன்புகழ் புனைய,
ஒரு சீர்காழி அதை யிசைக்க,
வண்ணநகர் லண்டனில்
வந்தடைந்தாய் வடிவாக
விண்ணும் மண்ணும் வண்ண
மயிலில் வலம் வந்த வுனக்கு
எண்ண மிதுவு மொன்றிருந்ததோ?

★

எங்கு நீ சென்றாலும்
நான் உன்பின்னால் வருவேன்;
பங்கு எனக்குண்டு உன்
புகழிலும் பெருமையிலும்;
இங்கு நீ எனை ஏமாற்ற
முடியுமென்று நினைத்தால்
மங்குமோ மயில் வாகனம்?

★

கொஞ்சும் எழிற் குமரன்;
அஞ்சும் அடியவர்க்கு
தஞ்சமளிக்கும் தலைவன்;
வஞ்சமிலா வடிவேலன்;
பிஞ்சிலே பழுத்த பாலன்;
மிஞ்சியதெல்லாம் எனக்கு
முருகா! உன் கஞ்சி தானோ?

மனோகரன் ம. மயில்வாகனம்,
உரும்பிராய்.

---

## இந்திய...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் மகனாகவேகருதிவளர்க்கிறார்கள். அவர்கள் தாம் தன் வளர்ப்புக் தந்தை-தாய் என்று தெரியாதபடி அவன் வளர்ந்து வருகிறான். தேசியப் பற்றுடன் இந்து ஆசாரத்தில் மிகவும் ஈடுபாடுகொண்டு வெள்ளையர்களை வெறுக்கிறான், ஆனால் முடிவில் தான் ஓர் ஆங்கிலேயன் என்பதை வளர்ப்புத் தாய் சொல்லி அறிந்ததும், அவளுடைய பெருந்தன்மையை மெச்சி இந்து-முஸ்லிம்-கிறிஸ்துவர் எவராயினும் இந்தியாவில் பிறந்தவர் எனின் பாரதமக்களே என்று பரந்த கோட்பாட்டைக் கடைப்பிடிக்கிறான். ரவீந்திரருடைய உலக சகோதரத்துவக் கருத்து இதில் பிரதிபலிக்கிறது.

1905-க்கும் 1913-க்கும் இடையே துவிஜேந்திரலால் ராய் என்ற பிரபல வங்க நாடகாசிரியர் 'மேவார்பதன்,' 'துர்க்காதாஸ்'போன்ற வீரம் செறிந்த நாடகங்களை எழுதித் தேசிய உணர்வை வளர்த்தார். ஆனால் அவற்றில் மொகாலாயரைப் பற்றிய எதிர்ப்புத் தான் அதிகம். அவருடைய தேசியம் 'இந்து தேசியம்' என்றே கூறவேண்டும். இருந்தாலும் 'ஏமன் தேசடி கோதாய் குர்ஜே பாபேனா ஜன்மபூமி' எங்கே தேடினாலும் கிடைக்காது. இம்மாதிரி தாய் நாடு [illegible] மக்களைக் கவர்ந்ததில் [illegible] தடையில்லை. (தொடரும்)

---

## விளையாடுவோம்

[illegible]ள்ளி கமலம் வாருங்கள்
துள்ளி நாங்கள்
மகிழுவோம்

அண்ணா நீயும் வாவேன்
கண்ணாம்பூச்சி ஆடுவோம்

மாது நீயும் வா வா
மாங்கொட்டை நாம்
கெந்துவோம்

பாலா வா நீ நாங்கள்
பந்து எறிந்து ஆடுவோம்

கிருஷ்ணா முரளி
வாருங்கள்
கிளித்தட்டு மறிப்போம்

பாமா பாமா வாவேன்
பாண்டி விளையாடுவோம்

குமுதா இங்கே வாரும்நீர்
கும்மி அடித்துப்
பழகுவோம்

வாடா சேகர் நாங்கள்
வாரோடிப் பார்ப்போம்

கோபு சொல்லு வாறியா
கோலாட்டம் பயிலு
வோம்

நாங்கள் சிறுவர் சேர்ந்
தெந்
நாளும் விளையாடுவோம்

—வ. கோவிந்தபிள்ளை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி: 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
M. D. ராமராவ்
**பாலநாகம்மா**

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
டி. ஆர். மகாலிங்கம்
அஞ்சலிதேவி
**ஆடவந்த தெய்வம்**
(புத்தம் புதிய பிரதி)

**வின்ஸர்** 2வது ஜனத்திரள் வாரம்!
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9
நாகேஷ்-முத்துராமன்-செளகார் ஜானகி
**"எதிர் நீச்சல்"** (புதிய பிரதி)
குறிப்பிட்ட தினங்கள் மட்டும்

**REGAL** JAFFNA. சில தினங்கள் மட்டும்
Phone: 360
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p.m. only
**"THE FLESH AND BLOOD SHOW"**
(கண்டிப்பாக வயது வந்தவர் மட்டு)
STRICTLY FOR ADULTS

**வெலிங்டன்**
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
**சஞ்சீர்** (ஹிந்தி) **SANJEER**

**லிடோ** Daily 10-30, 2-15, 4-45, 7-15 & 9-30
(யாழ் நகர்) போன்: 7693
**ARABIAN ADVENTURE**
(Color)

**SRIDHAR** JAFFNA
Daily 5 Shows—10-30 a.m. 2-30, 4-45, 7-00 & 9-30 p.m.
GANG WAR, AMBUSH, BEATINGS AND MURDER
The Crime War To End ALL Crime Wars
ANTHONY QUINN in
**THE DON IS DEAD**
(Adults Only)
(திகிலூட்டும் சண்டைகள் நிறைந்த படம்)

**ராஜா** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
சிவாஜி-விஜயா-சந்திரமோஹன்
கவிதா நடித்த
**ஜெனரல் சக்கரவர்த்தி**
(ஈஸ்மன்ட் கலர்)

**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி: 4 காட்சிகள்
சிவாஜி ... பத்மினி
**அன்புக்கரங்கள்**

**SANTHI** JAFFNA Phone: 7642
DAILY 10-30,a.m 2-30, 4-45, 7-00 & 9-30 P.M.
A Hilarious Action Comedy
Treat For The Entire Family...
Exciting...Fantastic...Thirilling...Enjoyable
Much Better than 'CRIME BUSTERS'
BUD SPENCER...TERENCE HILL
**WATCH OUT WE'RE MAD!**-COLOR

**ராணி** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
இல்லறம் இன்பமாக விளங்க "இருவர் உள்ளம்"
இணையவேண்டிய அவசியத்தை விளக்கும்
இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்-சரோஜாதேவி-எம்.ஆர். ராதா
பாலாஜி-ரங்கராவ் இன்னும் பலர் நடித்த
**இருவர் உள்ளம்**
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி

# சிறுகதை...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

எங்கடை பிள்ளையும் வேலையை விடவேணும்'' என்றார்.

''உழைக்கிறது முக்கியமில்லை. அவள் நல்லாயிருக்கிறதுதான்முக்கியம். உத்தியோகத்துக்கும்போய் வீட்டு வேலையும் ஒழுங்காய்ச் செய்யிறது கஷ்டம்'' என்றாள். அம்மா.

''ஆமாம் அவர் ஒழுங்காக உழைத்துப் போட நான் அமைதியாகக்க குடும்பம் நடத்தலாம்... அதுதான் சரி'' என எண்ணிக்கொண்டேன்.

''ஏதோ தம்மால் உழைத்துக் குடும்பத்தைப் பராமரிக்கச் சக்தி போதாது என்பதுபோல் உத்தியோகம் பார்க்கும் பெண்ணைத் தேடி அலையும் முதுகெலும்பில்லா ஆண்களிடையே இவர் எவ்வளவு சிறப்பானவர்'' என்று அவள் மனம் சொல்லியது.

அதன் மேல் தரகர் '' நான் ஒரு இடத்துக்குப் போகவேணும். போய் வாறேன்'' என்று அவசரமாகப் புறப்படத்தொடங்கினார். அப்பாவும் அம்மாவும் ''சாப்பிட்டு விட்டுப் போகலாம்'' என்று தடுத்தார்கள். தரகர் சாப்பிட்டு முடித்தபோது பக்கத்து வீட்டுமாமாவந்தார். பக்கத்து வீட்டு பரமலிங்கமாமாவும் தரகரும் ஒன்றாய்ப் படித்தவர்களாம். கதையிலிருந்த தரகருக்கு நேரம் ஐந்து மணியாகியது தெரியவில்லை. தரகர் அவசரமாக எங்கோ புறப்படத் தயாரானபோது மாப்பிள்ளையின் அண்ணா ஸ்கூட்டரில் பெண்பார்க்க வந்து விட்டார். அனுஷாவின் அண்ணா அவரை அமரவைத்து தேநீர் பலகாரமெல்லாம் கொண்டு போய்க் கொடுத்தான். சித்தப்பாவும் அம்மாவும் அப்பாவும் மாப்பிள்ளையின் அண்ணாவுடன் பேசப் போய்விட்டார்கள். அவசரமாகக் கிளம்பிய தரகர் அங்கேயே அமர்ந்து விட்டார்...உடுத்துக் கொண்டு அறையுள் நின்றபோது அனுஷாவின் மனதில் அம்மா தரகருடன் மத்தியானம் உரையாடும் போது பேசிய அந்த வசனங்கள் நல்லாக நினைவு வந்தன.

''அவளுக்கு எங்களிடம் உள்ளதெல்லாத்தையும் குடுக்கவும் நாங்கள் சம்மதம்...... எங்களுக்கு இந்த விஷயம் ஒப்பேறுவதுதான் முக்கியம்'' என்றல்லவா அம்மா சொன்னாள். அதை ஓடோடிப்போய் மாப்பிள்ளை வீட்டில் சொல்லி பெண் பார்க்க வரும் போது சற்று அதிகமாகச் சீதனம் கேட்கச் சொல்லத்தான் தரகர் அவசரப்பட்டிருப்பார்'' என்று அனுஷாவின் மனம் சொல்லியது. உடுத்துக் கொண்டிருக்கும்போது அம்மா வந்து ''பிள்ளை ... ... குதி உயர்ந்த சப்பாத்தையும் போட்டுக்கொள்'' மாப்பிள்ளை உயர்ந்தவராம்'' என்று சொன்னாள். உடுக்க உதவிக்கொண்டிருந்த தோழிகள் ஏதேதோ கேலி செய்தார்கள். மாப்பிள்ளையின் அண்ணாவும் நல்லவர். அவரை அனுஷாவுக்கும் அனுஷாவை அவருக்கும் நல்லாகப் பிடித்துப்போயிற்று. அவர் அவளோடு கொஞ்சம் கதைத்தார். பின்னர் சீதன வீட்டைப் பார்த்தார். கிணற்று நீரை, உவராயிருக்குமோ? என்ற நினைவில் குடித்துப் பார்த்தார். விருப்பத்தைத் தெரிவிக்க வெற்றிலையும்போட்டார். எதற்கும் ஒரு தரம் நாளைக்குப் பின்னேரம் அம்மாவோடு முடிவாக வந்து சீதனத்தைப் பற்றிக் கதையுங்கள்'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார். நேற்று மட்டுமல்ல இன்று காலையில் தரகர் அங்கு போகும்வரை மாப்பிள்ளை வீட்டார் வரையில் கூட கல்யாணம் நிச்சயமான மாதிரித் தான். காலையில் தரகர் வந்து ''பெம்புளைப்பகுதி உங்களை விடமாட்டுது' காசை முப்பது இஞ்சும், முப்பது கைக்காசுமாக அறுபதாக்கிக் கேளுங்கோ கட்டாயம் தருவினம்'' என்று சொன்னதிலிருந்து கதைமாறி விட்டது அதுதான் வந்திருந்த அனுஷாவின் சித்தப்பாவுக்கு அந்த நிலைமை. ''என்ன முடிவு சொல்றியள்...'' சித்தப்பா முடிவாகக் கேட்டார். அறுபதாயிரத்துக்கு ஒரு சதமும் குறையாது'' மாப்பிளையின் அண்ணா சொன்னார்.

''எங்களுக்கு அந்தளவு ஏலாது'' அனுஷாவின் சித்தப்பா அமைதியாக எழுந்து நடந்தார்.

பார்த்துக் கொண்டிருந்த தரகர் '' நிறைவிடத்திறமான இடமொன்றுங்களுக்கு ......'' என்று ஆரம்பித்தார். ''நிறமும் வேண்டாம்... இளக்கமும் வேண்டாம்... இனி எனக்குக் கல்யாணமே பேச வேண்டாம்'' என்று சுகுமாரன் கண்டிப்பாகச் சொல்லி விட்டான்.

அவனை விற்றுப் பணமாக்க நினைத்திருந்த அம்மாவும் அண்ணாவும் தரகரை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

(யாவும் கற்பனை)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஸ்ரீகாந்த்-ஜெய்சித்ரா
**பயணம்**

வட்டு. கண்காட்சியில்:

# அபிவிருத்தி சபையின் காட்சிப் பொருள்கள்

## பிராந்திய இயக்குநர் கவலை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் யாழ். கல்லூரியில் நடைபெற்ற வளர்ச்சிகாண் தொழில் நுட்பக்கண்காட்சியை நேற்று கைத்தொழில் அபிவிருத்திச் சபைப் பிராந்திய இயக்குநர் திரு. ரத்னயக்கா ஆரம்பித்து வைத்தார்.

திரு. ரத்னயக்காவை லயன்ஸ் கழக உபதலைவர் திரு. ஞாதர் செல்வராஜா வரவேற்றுப் பேசுகையில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக அவசரமாக காரில் பிராந்திய இயக்குநர் வருகைதந்திருப்பது அவரது ஆர்வத்தையும் அக்கறையையும் காட்டுகிறது என்றார்.

திரு. ரத்னயக்கா தமது சொற்பொழிவில் கைத்தொழில் அபிவிருத்திசபை இம்மாதிரி தொழில் நுட்ப அபிவிருத்தி பணிகளில் அதிக அக்கறை கொண்டிருக்கிறது என்றும் எரிபொருள் துறையில் புதிய சக்திவளங்களைக் கண்டுபிடிப்பதில் சபை தன்னால் ஆன உதவிகளைப்புரியும் என்றும் சொன்னார்.

இந்தக்கண்காட்சி மாசி மாதத்தில் வைக்கப்பட விருந்து பின்னர் பங்குனியில் வைக்கப்பட்டதினால் அபிவிருத்திச்சபையின் காட்சிப் பொருட்கள் வேறு காட்சிகளுக்கும் பங்கிட்டு அனுப்ப வேண்டி ஏற்பட்டது என்றும் தங்காலையில் ஒரு கண்காட்சி நடைபெறுவதாகவும் வேறும் சிலகண்காட்சிகளுக்கு பொருள்களும் சாதனங்களும் கொண்டு செல்லப்பட்டுவிட்டதாகவும் கூறிய அவர் இந்தக்கண்காட்சியில் சபைபெரிய அளவில் காட்சிப் பொருள்களை வைக்க முடியாமல் போனதற்காக மன்னிப்பும் கோரினார். இதற்காகவே தாம் நேராக காரில் பிரயாணம் செய்து வந்ததாக அவர் குறிப்பிட்டார்.

# மத்திய...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட மருத்துவ ஸ்தாபனங்களில் யாழ்ப்பாண மக்களுக்கு மருத்துவத்துறையில் பயிற்சியளிக்கப்பட்டது.

'ஆங்கிலக் கல்வியானது தமிழ், சிங்கள மக்களுக்கு பறங்கியரைப்போல் அதிகாரமளித்ததோடு, அரசாங்க சேவையில் உத்தியோகங்களைப் பெறவும், பின்னர் வர்த்தகத் தொழிலில் ஈடுபடவும் வாய்ப்பை அளித்தது' என முன்னாள் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் பேராசிரியா ஜே. வி. செல்லையா கூறியுள்ளார்.

இலங்கையில் வாழ்ந்த பல சமூகங்களுள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பல தமிழ் சமூகத்தினரே ஆங்கிலக்கல்வியைக் கற்பதில் பெருமளவு ஆர்வம் கொண்டிருந்தனர். யாழ்ப்பா பாணப் பிரதேசத்தின் இயற்கைச் சூழலும், அப்பிரதேச மக்கள் கல்வியில் கூடிய ஆர்வம் காட்டுவதற்குக் காரணமாக அமைந்தது.

'ஆங்கிலக் கல்வியைக் கற்ற தமிழ் மக்கள் தங்களுடைய சனத்தொகை விகிதாசாரத்திலும் பார்க்க கூடியளவில் அரசாங்கஉத்தியோகங்களைப்பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் வகித்தார்கள்' என்று பேராசிரியர் எஸ். ஏ. பேக்மன் (Pakeman) கூறியுள்ளார்.

ஆங்கிலக் கல்வியைக் கற்று அரசாங்க உத்தியோகங்களைப் பெறுவதே யாழ்ப்பாணத்து மக்களின் பிரதான குறிக்கோளாகப் பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் இருந்தது.

(முற்றும்)

# "இம்முறை அதிக யாத்திரிகர்"

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு உற்சவத்திற்கு கடந்த வருடத்திலும் பார்க்க கூடுதலான யாத்திரீகர் இலங்கையிலிருந்து இவ்வருடம் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. முதல் தினம்மட்டும் 6 இறங்குதுறையிலிருந்தும் சுமார் 3000 யாத்திரிகர்கள் சென்றுள்ளனர். நேற்று இத்தொகை இரட்டிமடங்காக அதிகரித்திருந்தது.

யாழ் உதவி சுங்க சேகரிப்பாளர் திரு எஸ். எம். ஜே. செனரத்ன கச்சதீவு உற்சவம் தொடர்பாக நேற்று நிருபர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார். கடந்தவருடம் கச்சதீவு உற்சவத்திற்கு இலங்கையிலிருந்து சுமார் 7000 யாத்திரிகர்கள் சென்றிருந்தனர் இம்முறை இத்தொகை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் டுகிறது என்றும் அவர் கூறினார்.

(க-இ)

# புதுமைத்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிந்துவர அறுபது நாடுகள் தம் பிரதிநிதிகளை அனுப்பி வைத்துள்ளன.

தொலைக் காட்சித் திட்டம் ஆசிரியர்களின் கற்பித்தல் முயற்சியை சுலபமாக்கும். மாணவரின் கவனித்தல் முறையை இலகுவாக்கும் என்கிறார்கள்.

அங்கே பொழுது போக்கு நிகழ்ச்சியைவிட, கல்வி நிகழ்ச்சியையே பொதுமக்களும் விரும்புகிறார்கள். அமெரிக்காவின் ஐம்பது மாநிலங்களுக்கும் தென் கரோலின் வழிகாட்டியாகத் திகழ்கின்றது.

இன்று தொலைக்காட்சியும் கல்வியும் பிரிக்கமுடியாதவகையில் ஒன்றிணைந்துள்ளன. ஏழை செல்வரென்ற பாகுபாடின்றி தொலைக்காட்சி மூலம் எவ்வளவோ எதிர் பார்க்கிறார்கள்.

பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் வேண்டும். கல்விப் போதனை நிகழ்ச்சிகளும் வேண்டும். யாவும் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற வேண்டும். வழிகாட்டுவது யார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வான் விபத்தொன்றில் தனது கால்களை இழந்த திரு. கே. டபிள்யூ சின்னையாவுக்கு யாழ் லயன்ஸ் கழகம் அன்பளிப்புச் செய்த மூன்று சக்கர சைக்கிளை தலைவர் லயன் எஸ். சபாரத்தினம் கையளிப்பதையும் ஈழநாடு பொது முகாமையாளர் திரு. து. சீனிவாசகம் நிற்பதையும் முதலாவது படத்திலும்; இவ்வைபவத்தில் டாக்டர் சபாரத்தினம் பேசுவதையும், சமூகசேவைத் திணைக்கள அதிகாரி திரு. கெங்காதரன் குத்துவிளக்கேற்றுவதை இரண்டாவது படங்களிலும் காண்க.


# மலிவு விற்பனை

ஜப்பான் தரத்தில்
சிங்கம் மார்க் இலாஸ்டிக்
No. 1 பேபி இலாஸ்டிக் 11 யார் 5/-
No. 2 1/4 இஞ்சி-11 யார் 7/25
No. 3 1/2 இஞ்சி-11 யார் 8/90
வியாபாரிகளுக்கு விஷேச கழிவு.

சிக்கோ டிறேடர்ஸ்,
43, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.


# பொலிஸ் இன்ஸ்பெக்டரை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

(மாவிட்டபுரம்)

பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பாகக் கைதாகி றிமாண்டிலிருந்துவரும் அளவெட்டியைச் சேர்ந்த சரவணமுத்து சற்குணசிங்கம் என்னும் சந்தேகநபர் தொடர்பான பொலிசாரின் பதிவேடுகளை இம்மாதம் 11-ம் திகதி தம்முன் சமர்ப்பிக்குமாறும், அன்று இச்சந்தேகநபரைக் கைதுசெய்த முன்னாள் சங்கானைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்கினை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் மல்லாகம் நீதிபதி உத்தரவிட்டார்.

வடபகுதியில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பாக 1977-ம் ஆண்டில் கைதுசெய்யப்பட்டமேற்படி சந்தேகநபர் மல்லாகம் நீதிமன்றத்தில் பல அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்டபோதும் எதிலும் அடையாளம் காணப்படவில்லை.

சிகரட் வானில் பணம் கொள்ளையடித்தது, கார் ஒன்றைக்கொள்ளையடித்தது, துப்பாக்கி வைத்திருந்தது ஆகிய குற்றச்செயல்கள் தொடர்பாக அவசரகாலச்சட்டத்தின் கீழ் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நபர் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட சமயம் சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் 'சந்தேகநபர் 3-9-77-ல் கைதுசெய்யப்பட்டு இன்றுவரை அநியாயமான முறையில் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். இவர் பல குற்றச்சம்பவங்கள் தொடர்பாக அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்டபோதும் எதிலும் அடையாளம் காணப்படவில்லை. சிகரட் வான் கொள்ளை, கார்க் கொள்ளையிலும் கூட இவர் அடையாளம் காணப்படவில்லை. அத்துடன் பொலிசார் இவரிடமிருந்து துப்பாக்கியைக் கைப்பற்றியதாகவும் தமது அறிக்கையில் தெரிவிக்கவில்லை. இவர் மூலம் துப்பாக்கியைக் கைப்பற்றியதாகவே அவர்கள் தெரிவித்துள்ளனர். ஆகவே இவரை பிணையில் விடவேண்டும்' என்று வாதாடினர்.

இதனையடுத்து நீதிபதி திரு. எஸ். இராஜசிங்கம் சங்கானை பொலிஸ் சார்ஜன்ட் குலசிங்கத்திடம் இதுபற்றி விசாரித்தபோது இவர் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டதாகவும், இவரை முன்னாள் சங்கானை பொலிஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்கினே கைதுசெய்ததால் அவருக்கே இவர் பற்றிய சகல விபரங்களும் தெரியுமெனவும் கூறினார்.

இதனையடுத்து நீதிபதி மேற்படி சந்தேகநபர் குறித்த பொலிசாரின் பதிவேடுகளை இம்மாதம் 11-ம் திகதி தம்முன் சர்ப்பிக்குமாறும், அன்று முன்னாள் சங்கானை பொலிஸ் இன்ஸ்பெக்டரும், தற்போது மொறட்டுவையில் கடமையாற்றுபவருமான இன்ஸ்பெக்டர் மிஸ்கினை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். (கு)

## அளவையியல்.?.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் 1979 ம் ஆண்டில் 'அளவையியல் வினாவிடைக் களஞ்சியம்' எனும் நூலையும் எழுதி வெளியிட்ட இவரது 'அளவையியல் வினாவிடைக் களஞ்சியம்' எனும் புதிய நூலொன்றை இவ்வாண்டில் பூபாலசிங்கம் புத்தகசாலையினர் வெளியீடு செய்துள்ளனர்,

பல்கலைக்கழக மாணவரும், உடுவில் மகளிர் கல்லூரி அளவையியல் ஆசிரியருமான இவரது 'அளவையியல் வினாவிடைக் களஞ்சியம்' எனும் நூலில் மாணவர்களுக்கு விடயங்களை இலகுவான முறையில் உணர்த்தும் இவரது எழுத்து வன்மை நன்கு பளிச்சிடுவதாக உள்ளது. வினாவிடைக் களஞ்சியம் எனும் பெயரில் இந்நூல் அமைந்திருந்தாலும் உண்மையில் வினாவிடை வடிவில் அமைந்த பூரணமான நூலாக இது தோற்றமளிக்கின்றது. அத்தியாயம் அத்தியாயமாக படங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பது இந்நூலின் தனிச்சிறப்பாகும். வென்வரிப்பட விளக்கங்கள், வாதங்களின் நிறுவல் முறைகள் போன்றவை இந்நூலில் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. கடந்தகால மாதிரி வினாக்கள், புதிய அத்தியாயங்கள், இலகுமுறையில் பலவற்றைக் கொண்டமைந்துள்ள இந்நூல் அளவையியல் மாணவர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும்.

## வானொலியில் இன்று

(யாழ்ப்பாணம்)

மிருதங்கவித்துவான் வே. அம்பலவாணரின் மிருதங்க வாத்தியக் கச்சேரி இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 10-30 மணிக்கு இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படவுள்ளது.

# ச. ச. சமாசக் கூட்டம் மார்ச் 31க்குள் கூட்டப்படும்

## உதவி தலைவர்க உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட சனசமூகநிலையங்களின் சமாசத்தின் பொதுக் கூட்டத்தை விரைவில் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கட்படும் என யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் உறுதியளித்துள்ளார்.

1976-ம் ஆண்டு தைமாதம் 17-ம் திகதிக்குப் பின்னர், யாழ். மாவட்ட சனசமூகநிலையங்களின் சமாசத்தின் பொதுக்கூட்டம் இன்றுவரை நடைபெறவில்லை. அத்துடன் சமாசத்தின் நிர்வாகசபைக் கூட்டமும் சில வருடங்களாகக் கூட்டப்படவில்லை.

வருடந்தோறும் நடைபெற வேண்டிய நிர்வாகசபைக் கூட்டமும் இதுவரை காலமும் நடைபெறாமல் இருக்கிறது. யாழ். மாவட்டத்தில் தற்சமயம் சனசமூகநிலையங்களின் சமாசம் ஒன்று இருப்பதாகத் தெரியவில்லை.

சமாசத்துக்கு புத்துயிர் அளித்து இதன் பொதுக்கூட்டத்தைக் கூட்ட நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி சமாசத்தின் நிர்வாகசபை உறுப்பினரும், வலிகாமம் மேற்கு சனசமூகங்களின் சமாசத்தின் உதவிச் செயலாளருமான திரு. சி. வரதராஜா தெரிவித்த புகாரை அடுத்தே உதவி ஆணையாளர் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

திரு. சி. வரதராஜா தமது புகாரைத் திரு. அல்பிரட்டிடமும், சனசமூகநிலையங்களின் மேற்பார்வையாளர் திரு. வ. கிருஷ்ணசாமியிடமும் எடுத்துக் கூறியதன்பிரகாரம் மார்ச் மாத முடிவிற்குள் சமாசத்தின் பொதுக்கூட்டத்தைக் கூட்ட நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளித்துள்ளார்.

மேற்படி சமாசத் தலைவர் முகாந்திரம் கே. பி. இராசையாவும் இதுகுறித்து உதவி ஆணையளருடன் தொடர்புகொண்டபோது இம்மாத முடிவுக்குள் சமாசத்தின் கூட்டத்தைக் கூட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் ஆணையாளர் உறுதியளித்தார். (இ)

## சுவீப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 16 K 0143 | 19 K 0530 |
| 21 K 0335 | 21 K 0840 |
| 31 K 0076 | 15 L 0088 |
| 21 L 0140 | 27 L 0253 |
| 01 M 0323 | 04 M 0749 |
| 15 M 0791 | 17 M 0902 |
| 18 M 0441 | 30 M 0323 |
| 06 N 0330 | 09 N 0983 |
| 24 N 0307 | 32 N 0298 |
| 33 N 0645 | 02 O 0882 |
| 18 O 0177 | 05 P 0519 |
| 17 P 0602 | 20 P 0692 |
| 12 Q 0326 | 19 Q 0887 |
| 25 Q 0038 | 30 Q 0653 |
| 30 Q 0740 | 32 Q 0594 |
| 07 R 0441 | 25 R 0259 |
| 30 R 0505 | 04 S 0845 |
| 12 S 0117 | 11 T 0385 |
| 22 T 0132 | 22 T 0151 |
| 24 U 0840 | 27 U 0683 |
| 30 U 0462 | 31 U 0132 |
| 28 V 0305 | 32 V 0246 |
| 20 W 0850 | 07 X 0125 |
| 15 X 0484 | 22 X 0137 |
| 03 X 0578 | 05 Y 0543 |
| 11 Y 0834 | 21 Y 0064 |
| 10 Z 0047 | 10 Z 0610 |
| 14 Z 0524 | 24 Z 0693 |
| 33 Z 0515 | |

இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை.

## இன...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கும் பொதுவானது தேசிய ஒற்றுமை. சமுதாயம் நல்வழியில் நடக்க ஒற்றுமை நல்லொழுக்கம் மிகவும் அவசியமானது.

ஜனாதிபதியின் உயர்ந்த லட்சியம் தேசிய ஒற்றுமையாகும். இங்கு பார்க்கும்போது ஜனாதிபதியின் இலட்சியம் கைகூடக்கூடியதாக இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

தேசிய ஒற்றுமை சமுதாய முன்னேற்றம் ஆகியனவே மாணவர் பேராட்டமாகும். சிறப்பாக செயலாற்றக்கூடியவர்கள் மாணவர்கள்தான். இலங்கை மாணவர் பரம்பரை சமுதாயத்தை பரிசுத்தப்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். (க-இ)

## அலுவலகத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலை ஊழியர் பேரவை அலுவலகத்திறப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறுகிறது.

சபைத் தலைவர் திரு. டட்லி குணசேகரா அலுவலகத்தைத் திறந்துவைப்பார். எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம அலுவலகளை ஆரம்பித்துவைப்பார். [கு]

## விசேட கூட்டம்

(அரியாலை)

ஒடுக்கப்பட்டோர் ஐக்கிய விடுதலை முன்னணியின் விசேட கூட்டம் இன்று பிற்பகல் ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் நடைபெறும்.

## கேகாலை...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேகாலை மாவட்ட தமிழ்' சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் நாளை திங்கட்கிழமை வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் சென்று அப்பகுதி மக்களுடன் அளவளாவி தமிழ்-சிங்கள நல்லுறவை வலுப்படுத்துவர். (கொ-கு)


# நன்றி நவிலல்

5—3—80 புதன்கிழமை எமது இல்லத்தில் இடம்பெற்ற எமது செல்வப் புதல்வன் அலெக்ஸாந்தரின் பெயர்சூட்டு விழாவில் சமூகந் தந்து குழந்தையை ஆசீர்வதித்து எம்மை மகிழ்வித்த எமது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பி. அழகர்சாமி
தம்பதிகள்

"சரஸ்வதி இல்லம்"
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

5189




இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மார்ச்மாதம் 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the Gen... Office Sri Lanka under No QE/8848/78 The Eelanadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org